# சர்வதேசப் பார்வை

சர்வதேச விவகாரங்களுக்கான இஸ்லாமிய இதழ் 29




## துருக்கிய பொதுத் தேர்தல்
### குர்திஷ்களும் AKP யின் எதிர்காலமும்



## உய்குர் முஸ்லிம்களுக்கு எதிரான
### கலாசாரப் படுகொலையில் சீன அரசு




## ரோஹிங்யா முஸ்லிம்கள்
### பிராந்திய அரசியல் சதுரங்க விளையாட்டின் பலிக்கடாய்கள்



# யெமன்: எதிர்பார்த்த துயரம் இறுதியில் நிகழ்கின்றது!



# வாசகர்களுக்கு
# ஈதுல் பித்ர் நல்வாத்துக்கள்





# யெமன்: எதிர்பார்த்த துயரம் இறுதியில் நிகழ்கின்றது


துருக்கிய பொதுத் தேர்தல்: குர்திஷ்களும் AKP யின் எதிர்காலமும் 06

ஆசியாவில் முஸ்லிம் சிறுபான்மை 09

ரோஹிங்யா முஸ்லிம்கள்: பிராந்திய அரசியல் சதுரங்க விளையாட்டின் பலிக்கடாய்கள் 12

இனப்படுகொலையின் வாயிலில் நிற்கும் ரோஹிங்யா முஸ்லிம்கள் 17

குவைத் குண்டுவெடிப்பும் ஐசிஸ் இன் வியாபகமும் 28

உலக அமைதியை அச்சுறுத்தும் அமெரிக்கா 32

உய்குர் முஸ்லிம்களுக்கு எதிரான கலாசாரப் படுகொலையில் சீன அரசு 35

எகிப்து சட்டமா அதிபரின் கொலை: தீவிரமடையும் இஃவானக்ள மீதான ஒடுக்கு முறை 38


காஷ்மீரில் இந்திய இராணுவத்தின் சிறப்பதிகாரம் 40


---


**சர்வதேசப் பார்வை**

சர்வதேச விவகாரங்களுக்கான இஸ்லாமிய இதழ்

ஜூலை - ஓகஸ்ட் 2015 - இதழ் - 29


தனிப் பிரதி 60.00



பிரதம ஆசிரியர்:
றவூப் ஸெய்ன் M.A, M.Phil

தளக்கோலம், அட்டை வடிவமைப்பு:
அஸர் வஸீர்

தட்டச்சு:
சாஜித் அலி

சந்தா விபரம்:
ஒரு வருட சந்தா - 300/=
தனி இதழ்: 60/=

**MMC - Meelparvai Media Centre,** No. 49, Sri Mahinda Dharma Mawatha (Perth Road) Colombo-09.
Tel : 077 2227569 Email : meelparvai@gmail.com, www.meelparvai.net



# Editorial

## ஆசிரியர் தலைப்பு

சமகால உலக முஸ்லிம்களிடம் பிரமாண்டமான சனத்தொகையும் பொருளியல் வளங்களும் குவிந்து கிடக்கின்றபோதும், கல்வியிலும் அரசியலிலும் இராணுவத் துறையிலும் வரலாற்றில் முன்னொருபோதும் இல்லாத பின்னடைவுக்கு முஸ்லிம்கள் முகம்கொடுத்துள்ளனர்.

200 கோடி முஸ்லிம்களில் 8 கோடி முஸ்லிம்கள் உலகின் பல நாடுகளில் அகதிகளாய் அலைக்கழிந்து வருகின்றனர். 10 இற்கும் மேற்பட்ட முஸ்லிம் பெரும்பான்மை நாடுகளில் உள்நாட்டு சிவில் யுத்தங்கள் நடைபெற்று வருகின்றன. பெரும்பாலான நாடுகளில் அரசியல் ஸ்திரம் சீர்குலைந்து, இராணுவ ஆட்சியின் கெடுபிடிகளும் மன்னராட்சியின் ஒடுக்குமுறைகளும் நீடிக்கின்றன.

ஜனநாயகக் கட்டமைப்போடு கூடிய முஸ்லிம் நாடுகளைத் தேடுவது மிகவும் கடினமாகும். இஸ்லாமிய இலட்சியத்தோடு கூடிய நாடுகளைக் காண்பதும் அரிதாகும். இஸ்லாமியர்களுக்கும் மேற்கத்தேயர்களுக்கும் இடையிலான மோதல் இப்போது இஸ்லாமியர்களுக்கிடையிலான மோதலாக மாற்றப்பட்டுள்ளது.

அமெரிக்காவும் அதன் சியோனிஸக் கூட்டணியும் முஸ்லிம் உலகத்திற்குள்ளேயே பாரிய மோதல் ஒன்றை உருவாக்குவதற்கான சதித் திட்டத்தில் இறங்கியுள்ளது. அறபு-முஸ்லிம் நாடுகளிலும் அதற்கு வெளியிலும் களமிறக்கப்பட்டுள்ள ஆயுதக் குழுக்கள் இச்சதித் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

ஐசிஸ் எனப்படும் ஆயுத இயக்கம் மிக வேகமாக முன்னேறி வருகின்றது. 2014 ஜூன் 29 இல் ஈராக்கின் மௌசூல் நகர பள்ளிவாயலில் கிலாபத் பிரகடனம் செய்த இவ்வமைப்பு, கடந்த ஒரு வருடத்திற்குள் 18 முஸ்லிம் நாடுகளுக்குள் ஊடுருவியுள்ளது. தற்கொலை குண்டுத் தாக்குதல், தரைவழித் தாக்குதல் என அதன் தாக்குதல்கள் உக்கிரமடைந்துள்ளதோடு, இளைஞர் அணி, பெண்கள் அணி என்று கட்டமைப்பும் வியாபகம் பெற்று வருகின்றது.

முஸ்லிம் உலகம் எதிர்நோக்கியுள்ள மிகப் பெரிய சாபக்கேடுகளுள் ஒன்றான இவ்வியக்கத்தின் வியாபகம், சிவில் சமூகத்தின் அழிவுக்கும் அரசியல் ஸ்திரமின்மைக்கும் நீடித்த போருக்குமே வழிவகுக்கப் போகின்றது. இதன் பின்னணியில் இஸ்லாத்தின் எதிரிகள் இருப்பது தெளிவாகின்றது. ஆயினும், இந்த ஆபத்தை எதிர்கொள்வதற்கான மூலோபாயங்களை முஸ்லிம் நாடுகள் வகுத்துச் செயற்படுவதாகத் தெரியவில்லை.

ஒட்டுமொத்த இஸ்லாமிய உலகையும் ஒரு நீடித்த இராணுவ மோதலுக்குள் தள்ளுவதே எதிரிகளின் இலக்காகும். அதில் அவர்கள் ஓரளவு வெற்றி பெற்றும் வருகின்றனர். எமது இளைஞர்களுக்கு இஸ்லாமிய சமூக மாற்றம் பற்றிய சரியான கண்ணோட்டத்தை வழங்குவதே நீண்ட காலத்தை இலக்காகக் கொண்டு நாம் ஆற்ற வேண்டிய உடனடிப் பணியாகும்.

இந்த வகையில் சமகால அரபு-இஸ்லாமிய உலகில் தீப்பற்றி எரிகின்ற யெமன் போர் பற்றிய சிறப்புக் கட்டுரையோடு பல்வேறு நடப்பியல் விவகாரங்களையும் அவாவி சர்வதேசப் பார்வையின் இதழ் 29 வெளிவருகின்றது. தொடர்ந்தும் வாசகர்களின் ஆதரவை எதிர்பார்த்து நிற்கின்றோம்.

பிரதம ஆசிரியர்.

# துருக்கியில் சீனர்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள்




சிங்கியாங் மாநிலத்தில் துருக்கிய வம்சாவளியினரான உய்குர் முஸ்லிம்கள் மீது சீன அரசாங்கம் மேற்கொண்டு வரும் அடக்குமுறைகளைக் கண்டித்து துருக்கியின் தலைநகர் அங்காராவில் பாரிய மக்கள் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அங்காராவிலுள்ள சீனத் தூதுவராலயத்திற்கு முன்பாக நடைபெறும் ஆர்ப்பாட்டங்களில் பெருந்தொகை மக்கள் கலந்து கொள்கின்றனர்.

ரமழான் மாதத்தில் நோன்பு நோற்பதற்கு உய்குர் முஸ்லிம்கள் மீது சீன அரசாங்கம் விதித்துள்ள தடைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே ஆர்ப்பாட்டம் நடைபெறுகின்றது. இதனால் துருக்கி-சீன உறவுகள் பாதிக்கப்படலாம் எனக் கூறப்படுகின்றது.

சீன அரசாங்கத்தினால் விரட்டப்படும் முஸ்லிம்கள் எந்தவேளையிலும் துருக்கியில் குடியேறலாம் என்று துருக்கிய அரசு அறிவித்துள்ளதோடு, சீனா மிகுந்த பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும் எனவும் எச்சரித்துள்ளது.

இதற்கிடையில் துருக்கிக்குச் செல்லும் சீன சுற்றுலாப் பயணிகள் எச்சரிக்கையோடு இருக்க வேண்டும் என தனது தூதுவராலயத்தினூடாக சீனர்களைக் கேட்டுக் கொண்டுள்ளது. சீனா துர்கிஸ்தானில் வாழும் உய்குர் இன முஸ்லிம்கள் மீது கடந்த பல ஆண்டுகளாக கொலை வெறித் தாக்குதல்களை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# இந்திய-இஸ்ரேல் பிரதமர்கள் சந்திப்பு



சர்ச்சைக்குரிய இந்தியப் பிரதமர் மோடி இஸ்ரேலியப் பிரதமர் நெடன் யாஹுவை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். அவர்களிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தை குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சு எவ்விதத் தகவலையும் வெளியிடவில்லை.

இஸ்ரேலுக்கு எதிரான ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தை தோற்கடிப்பதற்கு இந்தியாவின் உதவியை நெடன் யாஹு கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜெனீவாவில் இவ்விருவரும் சந்தித்தமை பற்றிய செய்தியை புகைப்படத்துடன் 'த ஹிந்து' பத்திரிகை 04-07-2015 அன்று வெளியிட்டிருந்தது. இவ்வருட இறுதிக்குள் இந்தியப் பிரதமர் மோடி இஸ்ரேலுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் கடந்த மாதம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

காஸாவில் கடந்த வருடம் இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் 2251 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டமை குறித்து மனித உரிமை சபையில் இஸ்ரேல் விசாரிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தியாவில் முஸ்லிம்களுக்கு எதிராக செயல்பட்டு வரும் மோடி, பலஸ்தீனில் முஸ்லிம்களுக்கு எதிராகச் செயற்பட்டு வரும் நெடன் யாஹுவைச் சந்திப்பது மிகவும் ஆபத்தானது என்று எச்சரிக்கப்படுகின்றது. இந்தியப் பிரதமர் ஒருவர் இஸ்ரேலுக்கு விஜயம் மேற்கொள்ளவிருப்பது இதுவே முதற் தடவையாகும்.

# மலேசியப் பிரதமர் நஜீபுக்கு எதிரான விசாரணை ஆரம்பம்



700 மில்லியன் டொலர் அரச நிறுவனங்கள், வங்கிகள், கம்பனிகள் ஊடாக பிரதமர் நஜீபின் வங்கிக் கணக்கிற்கு மாற்றப்பட்டமை குறித்து மலேசியாவில் விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன. மலேசிய அரசாங்கம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல் பத்திரிகை 03-07-2015 அன்று செய்தி வெளியிட்டிருந்தது.

மலேசியாவின் சட்டமா அதிபர் இதற்கென விஷேட விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். நாட்டின் பெருந் தொகைப் பணம் பிரதமர் நஜீப் ரஸ்ஸாக்கின் வங்கிக் கணக்கிற்கு மாற்றப்பட்டமை குறித்து பக்கச்சார்பற்ற விசாரணை மேற்கொள்ளப்படும் என சட்டமா அதிபர் உறுதியளித்துள்ளார்.

# ஆப்கானில் ஊடுருவியுள்ள ஐசிஸ்




ஆப்கானில் நன்கர்ஹார் மாகாணத்தின் முக்கிய பகுதிகளை தாலிபான்களிடமிருந்து ஐசிஸ் பயங்கரவாதிகள் கைப்பற்றியுள்ளனர். முதன் முறையாக தாலிபான்களுக்கும் ஐசிஸ் பயங்கரவாதிகளுக்கும் இடையில் நடைபெற்ற மோதலை அடுத்தே ஐசிஸ் இப்பிராந்தியத்தைக் கைப்பற்றியுள்ளது.

ஆப்கானிஸ்தானில் ஊடுருவியுள்ள ஐசிஸ், தாலிபான்களுக்கு எதிரான தாக்குதல்களைத் தொடங்கியுள்ளது. இது ஆப்கானின் ஸ்திரத் தன்மைக்கு விடுக்கப்படும் மற்றொரு பாரிய அச்சுறுத்தல் என்று கருதப்படுகின்றது. அறபு நாடுகளின் எல்லைகளைத் தாண்டி ஐசிஸ் ஊடுருவியுள்ள முக்கியமான பிராந்தியமாக ஆப்கான் கருதப்படுகின்றது. ஆப்கானை விட்டும் வெளியேறுமாறு தாலிபான்கள், ஐசிஸ் அமைப்பிற்கு எச்சரித்த போதும் அவர்கள் நேரடியான தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

''ஐசிஸ் கிளர்ச்சியாளர்கள் பிக்அப் வாகனங்களிலும் டிரெக் வண்டிகளிலும் ஆயுதங்களோடு வந்து இப்பிரதேசத்தில் தாலிபான்களுக்கு எதிராக தாக்குதல் நடத்தினர். தாலிபான்கள் எதிர்த்து நிற்க முடியாமல் பின்வாங்கினர்'' என்கிறார் ஆச்சின் மாவட்ட குலக் குழுத் தலைவர் ஹாஜி அப்துல் ஜான்.

இதேவேளை, சினாயில் நிலைகொண்டுள்ள ஐசிஸ் தீவிரவாதிகள் ஹமாஸ் அமைப்பிற்கும் எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சட்டமா அதிபரின் படுகொலையைத் தொடர்ந்து எகிப்தில் குறிவைக்கப்படும் இஹ்வான்கள்



ஹிஷாம் பரகத் படுகொலை குற்றச்சாட்டை இஹ்வான்கள் மீது போடும் ஸீஸி அரசாங்கம், கெய்ரோவிலுள்ள வீடொன்றைச் சுற்றிவளைத்து 13 இஹ்வான் உறுப்பினர்களை சுட்டுக் கொன்றுள்ளதோடு 63 பேரைக் கைதுசெய்துள்ளது.

2013 ஜூலை இராணுவ சதிப் புரட்சியைத் தொடர்ந்து இஹ்வான்கள் மீதான அடக்குமுறை பாரியளவில் கட்டவிழ்க்கப்பட்டது. ஜனாதிபதி முர்ஸி உட்பட முன்னணித் தலைவர்கள் அனைவரும் சிறையில் அடைக்கப்பட்டனர். தற்போது ஹிஷாம் பரகத்தை ஸீஸி அரசாங்கமே திட்டமிட்டு படுகொலை செய்துவிட்டு, இஹ்வான்களை முற்றாக அழிப்பதற்கான நியாயமாக குற்றச்சாட்டை அவர்கள் தலைமீது போடுகின்றது.

இராணுவப் புரட்சி நடந்து இரண்டு ஆண்டு நிறைவில் மீளவும் எகிப்தில் மக்கள் புரட்சியொன்று ஏற்பட்டு விடக் கூடாது என்பதை முற்கூட் டியே தடுப்பதற்கான நாடகமே ஹிஷாம் பரகத் தின் படுகொலை என அவதானிகள் கருதுகின்றனர்.

# வரலாற்றுப் புகழ் மிக்க சிரியாவின் பல்மைரா நகரை அழித்து வரும் ஐசிஸ்



சிரியாவிலுள்ள பல்லாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த கட்டடங்களையும் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னங்களையும் ஐசிஸ் தீவிரவாதிகள் தொடர்ந்தும் அழித்து வருகின்றனர். தற்போது ஐசிஸ் பெண் போராளிகளின் முக்கிய தளமாக பல்மைரா மாறியுள்ளது.

சிரிய அரச படையினரை வரிசையாக வைத்து பெண் போராளிகள் சுட்டுக் கொல்லும் காட்சி அடங்கிய ஒளிநாடாவை ஐசிஸ் வெளியிட்டுள்ளது. 20 வயதுக்குக் குறைவான பெண்கள் சிரிய அரச படையினரை வரிசையாக வைத்து சுடும் இக்காட்சி பெரும் சர்ச்சையை எழுப்பியுள்ளது. இஸ்லாமிய உலகின் பல பகுதிகளிலிருந்து பெண்களும் இவ்வியக்கத்தில் இணைந்து வருவதாகக் கூறப்படுகின்றது.

# போக்கோ ஹராமில் இணையும் பெண் போராளிகள்

நைஜீரியாவின் சபர்மாரி கிராமத்தில் சனச் செறிவான இட மொன்றில் பெண் தற்கொலை குண்டுதாரி ஒருவர் பாய்ந்ததனால் அங்கு பாரிய வெடிப்புச் சத்தம் கேட்டதாகவும் 50 இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மூன்று நாட்களுக்குள் 200 பேர் இவ்வாறு கொல்லப்பட்டுள்ளனர். கிராமப் பகுதிகளில் தற்கொலை குண்டுத் தாக்குதலில் ஈடுபடுவோர் போக்கோ ஹராம் இயக்கத்தில் இணைந்துள்ள பெண் போராளிகள் என்று கூறப்படுகின்றது. ஐசிஸ் இயக்கம் போன்று நைஜீரியாவில் போராடி வரும் போக்கோ ஹராம் இயக்கத்திலும் பெண்கள் இணைந்து வருகின்றனர்.

# துருக்கிய பொதுத் தேர்தல்

## குர்திஷ்களும் AKP யின் எதிர்காலமும்




இறுதியாக நடைபெற்ற துருக்கிய தேர்தல் முடிவுகளின் படி தனித்து ஆட்சி அமைக்கும் பலத்தை ஆளும் AKP இழந்துள்ளது. குர்திஷ் கட்சிக்கு ஆதரவான மக்கள் ஜனநாயக கட்சி நடந்து முடிந்த தேர்தலில் குறிப்பிட்டளவு ஆசனங்களைப் பெற்றிருப்பதே AK கட்சியின் வீழ்ச்சிக்கான காரணமென்று தெரிவிக்கப்படுகின்றது.

துருக்கியின் தென்கிழக்குப் பிராந்தியத்தில் மக்கள் ஜனநாயக கட்சி பெரும் ஆதரவைப் பெற்றுள்ளது. மொத்தத்தில் பாராளுமன்றத் தேர்தலில் AKP வெற்றி பெற்றுள்ள போதும், அதனால் தனித்து நின்று ஆட்சி அமைக்க முடியாது. மக்கள் ஜனநாயக் கட்சி 13 வீத ஆசனங்களைப் பெற்றுள்ளதாக தற்காலிக தேர்தேல் முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன.

AKP கட்சி 41 வீதமான வாக்குகளையே பெற்றுள்ளது. பிரதான எதிர்க்கட்சியான குடியரசு மக்கள் கட்சி (CHP) 25 வீதமான வாக்குகளைப் பெற்றுள்ளது. அதே நேரத்தில் தேசிய இயக்க கட்சி 16.5 வீத வாக்குகள் பெற்று மூன்றாம் இடத்தில் உள்ளது. துருக்கி 70 மில்லியன் மக்கள் தொகையில் 54 மில்லியன் பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். அவர்களுள் 86 வீதமானோர் வாக்களிப்பில் கலந்துகொண்டுள்ளனர்.

ஆசனங்களின் அடிப்படையில் AKP 258 ஆசனங்களைப் பெற்றுள்ளது. 550 ஆசனங்களைக் கொண்ட துருக்கிய பாராளுமன்றத்தில், ஒரு கட்சி தனித்து ஆட்சியமைக்க வேண்டுமாயின். ஆகக் குறைந்தது 276 ஆசனங்களையேனும் பெற்றிருக்க வேண்டும். CHP, MHP, HDP ஆகிய கட்சிகள் முறையே 132, 81, 79 ஆசனங்களை தக்கவைத்துள்ளன. கடந்த தேர்தலில் 311 ஆசனங்களோடு AKP தனித்து ஆட்சியமைத்தமை குறிப்பிடத்தக்கது.

13 ஆண்டுகளாக ஆட்சியில் நீடித்த AKP தற்போது ஒரு தற்காலிக பின்னடைவுக்கு முகம் கொடுத்துள்ளமையை தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன. தேர்தல் முடிவுகள் குறித்து பிரதமர் அஹ்மத் தாவூத் ஒக்லூ கருத்துத் தெரிவிக்கையில்,

''தேசத்தின் தீர்வே இறுதியானது. அதை கௌரவப் படுத்துவதே அனைத்து அரசியல் கட்சிகளினதும் பொறுப்பாகும்'' என்றார். AKP கட்சி தலைமை அலுவலகத்தில் நடந்த ஊடகவியலாளர் சந்திப் பில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 13 ஆண்டுகால AKP யின் ஆட்சி பற்றிய மக்களின் மதிப்பீடு பல்வேறு கோணங்களில் நோக்கத்தக்கது. மதச்சார்பற்ற கட்சிகள் 1990 களுக்கு முன்னர் இஸ்லாமிய கட்சிகளை அடக்கி ஆண்டது போல AKP, மதச்சார்பற்ற கட்சிகளை அடக்கி ஆளவில்லை. மிகுந்த ஜனநாயகத் தன்மை யோடும், வெளிப்படைத் தன்மையோடும் AKP அரசாங்கம் செயற்பட்டது. பொருளாதாரத் துறை யில் பாரிய முன்னேற்றங்களை எட்டியது.

அர்துகான் வழங்கிய சுதந்திரம் நாட்டின் எதிர் கட்சிகளாலும் பிராந்திய சதிகாரர்களாலும் பிழை யாகக் கையாளப்பட்டது. அர்துகான் அரசாங்கத் தின் மீது ஊழல் மோசடி குறித்து பிழையான பரப் புரைகள் ஊடகங்களால் மேற்கொள்ளப்பட்டன. நாட்டின் சில அரச நிறுவனங்களைக் கட்டுப்படுத்தி வந்த சில தனிப்பட்ட நபர்கள் அவற்றைப் AKP க்கு எதிராகப் பயன்படுத்தி வந்தனர்.

மதச்சார்பற்ற அரசியல் கட்சிகள் அரசாங்கம் நடத்தியபோது குர்திஷ் தொழிலாளர் கட்சியும் அதன் செயல்பாடுகளும் திட்டமிட்டு அடக்கப்பட் டன. அரச பயங்கரவாதம் அவ்வியக்கத்தின் ஆதர வாளர்களின் மீது கட்டவிழ்த்து விடப்பட்டது. குர்திஷ்களின் சுயநிர்ணய உரிமை மதச்சார்பற்ற கட்சிகளால் அங்கீகரிக்கப்படவில்லை. 1991 இல் முன்னாள் ஆட்சியாளர் நஜ்முடீன் அர்பகான் பிரதமராக விளங்கியபோது குர்திஷ்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரித்து பேச்சுவார்த்தை நடாத்துவதற்குத் தயாரானார்.

இராணுவ சதிப்புரட்சியின் மூலம் அவரது ரபா கட்சி அரசாங்கம் தடைசெய்யப்பட்டதோடு அர்ப கான் சிறையிடப்பட்டார். 2000 களில் அர்பகானின் மாணவர்களினால் உருவாக்கப்பட்டதே AK கட்சி யாகும். அர்பகானின் அடிச் சுவட்டைப் பின்பற்றி குர்திஷ்கள் பற்றிய அதே அரசியல் நிலைப்பாட் டையே அர்துகானின் AKP யும் எடுத்து வந்தது. குர்திஷ்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்ப தை ஏற்றுக் கொண்டு அவர்களின் தன்னியல்பான செல்வாக்கை அங்கீகரித்தது.

துருக்கியின் தென்கிழக்குப் பிராந்தியத்தில் குர்திஷ் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற னர். நடந்து முடிந்த தேர்தலில் குர்திஷ் ஆதரவுக் கட்சியான மக்கள் ஜனநாயகக் கட்சி பெற்றுள்ள வாக்குகள் அர்துகான் அரசாங்கத்தின் ஜனநாயகத் தன்மையையும் பரந்துபட்ட ஊடக சுதந்திரத்தை யும் வெளிப்படைத் தன்மையையுமே எடுத்துக் காட்டுகின்றன. ஒரு புதிய அரசியலமைப்புச் சட் டத்தை வரையப் போவதாக தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதி அர்துகானும் பிரதமர் தாவூத் ஒக்லூவும் தெரிவித்திருந்தனர்.

அரசியலமைப்புச் சட்டத்தில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டுமாயின், பாராளுமன்றத்தில் குறைந்தது 330 ஆசனங்கள் தேவையாகும். அதே வேளை மாற்றப்பட்ட அரசியலைப்புச் சட்டம் பொது மக்கள் வாக்கெடுப்பிற்கு உட்பட வேண்



டும். பிரதமர் முறைக்குப் பதிலீடாக ஜனாதிபதி முறைமையை கொண்டு வரவே AKP முயற்சிக் கின்றது. ஆனால் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் கூட்டுவதற்கு தேர்தல் முடிவுகள் போதுமானதாக இல்லை.

AKP அரசாங்கத்தையும் அதன் கொள்கைகளை கடுமையாக எதிர்த்து வரும் மக்கள் ஜனநாயக் கட்சியின் செல்வாக்கு AKP இற்கு பெரும் சவாலாகவே பார்க்கப்படுகின்றது. மக்கள் ஜனநாயக கட்சியின் துணைத் தலைவர்களுள் ஒருவரான ஸலாஹுதீன் தெஜிர்தாஸ் ''நாம் அரசாங்கத்தை தோற்கடித்துள்ளோம். இது ஒடுக்கப்பட்டவர்களின தும் அந்நியமாக்கப்பட்டவர்களினதும் வெற்றி'' என தமது கட்சியின் வெற்றி குறித்து கருத்து தெரிவித் துள்ளார். HDPயும் CHPயும் இணைந்து வெளிட்ட அறிக்கையில் ஜனாதிபதி முறைமை பற்றிய விவாதம் இத்துடன் முடிந்து விட்டது என குறிப் பிட்டுள்ளனர்.

குர்திஷ்களின் வரலாற்றில் அவர்கள் அரசியல் ரீதியாக பலம் பெற்றுள்ளமை. இதுவே முதற் தடவையாகும் குறிப்பாக, பாராளுமன்ற அரசியலில் குர்திஷ்கள் பெற்றுள்ள இச்செல்வாக்கு அரசியல் ரீதியில் மிகவும் முக்கியத்துவமானது. துருக்கியின் தென்கிழக்கில் மக்கள் ஜனநாயகக் கட்சியின் வெற்றியை மக்கள் கொடியசைத்துக் கொண்டாடி வருகின்றனர்.

வெளிவந்துள்ள முடிவுகளின் படி AKP பிறிதொரு கட்சியுடன் கூட்டுச் சேர்ந்தே அரசாங்கத்தை அமைக்க வேண்டியுள்ளது. பிரதான எதிர்கட்சியான CHP, AKPயுடன் கூட்டுச் சேரும் என எதிர் பார்க்க முடியாது. இதேவேளை மக்கள் ஜனநாயக் கட்சியும் AKPயுடன் இணைவதற்கான வாய்ப்பு குறைவாகவே உள்ளது. இந்நிலையில் 16.5 வீதமான வாக்குகளைப் பெற்று 81 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ள தேசிய இயக்கக் கட்சி (MHP) உடன் AKP இணைந்து ஆட்சியமைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

குர்திஷ் இன மக்கள் துருக்கி, சிரியா, ஈரான், ஈராக் போன்ற நாடுகளில் பெருமளவு வாழ்கின்றனர். இந்நான்கு நாடுகளிலும் குர்திஷ் மக்கள் செறிந்து வாழும் பிராந்தியங்களை ஒன்றிணைத்து ஒரு தனி நாட்டை குர்திஷ்களுக்கென உருவாக்க வேண்டும் என குர்திஷ் தொழிலாளர் கட்சி நீண்ட காலமாகப் போராடி வருகின்றது.

ஏற்கனவே ஈரானிலும் சிரியாவிலும் மொத்தமாகவே அடக்கப்பட்டுள்ள குர்திஷ்கள் இன்றைய ஈராக்கில் மிகப் பெரும் செல்வாக்குடன் அரசியல் அதிகாரம் பெற்று வாழ்கின்றனர். தற்போது துருக்கியில் குர்திஷ்கள் படிப்படியான அரசியல் செல்வாக்கு பெற்று வருவதன் மூலம் மக்கள் ஆதரவை திருப்பி வருகின்றனர்.




துருக்கியில் AKP அரசாங்கம் ஊடகங்கள் மீது விதித்த கட்டுப்பாடுகளும் வரையறைகளுமே அதன் வாக்குச் சரிவுக்கு காரணமென்று சில ஊடகவியலாளர்கள் எழுதியுள்ளனர். இன்னொரு வகையில் அர்துகானின் ஊடகக் கொள்கையை நேர்மறையாக அணுகும் அரசியல் ஆய்வாளர்கள் ஊடகங்களுக்கு வழங்கப்பட்ட கட்டற்ற சுதந்திரமே அரசுக்கெதிரான பொய்ப் பிரச்சாரங்களுக்கும் வெளிநாட்டில் இருந்த வண்ணம் நாட்டை தவறான திசைக்கு இட்டுச் செல்ல நினைக்கும் சில விஷம சக்திகளின் பிரச்சாரங்களுக்கும் வழிகோலியது. எனவே, அர்துகானின் சுதந்திர ஊடகக் கொள்கையே அவரின் சரிவுக்குக் காரணமென வேறு சில அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.



# ஆசியாவில் முஸ்லிம் சிறுபான்மை

உலகிலுள்ள கண்டங்களில் பரப்பளவில் மிகப் பெரியது ஆசிய கண்டமாகும். சனத்தொகையிலும் ஆகப் பெரிய கண்டமாக அதுவே விளங்குகின்றது. உலகின் நீளமான நதிகள், ஆறுகள், குளங்கள், பல்வேறு வகையான நிலப்படுக்கைகள், தாவரங்கள் என வேறுபட்ட புவியியல் அமைப்பை கொண்டுள்ள ஆசியா; மொழி, கலாசாரம், இனம் மதம் ஆகியவற்றிலும் பன்மைத்துவத்தைப் பிரதிபலிக்கின்றது.

மொத்தமாக இக்கண்டத்தில் 51 தேச அரசுகள் (நாடுகள்) உள்ளன. 440 கோடி மக்கள் வாழ்கின்றனர். அதில் இந்தியாவிலும் சீனாவிலுமாக 280 கோடி மக்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக்கண்டத்திலுள்ள 27 முஸ்லிம் பெரும்பான்மை நாடுகளில் 118 கோடி முஸ்லிம்கள் வாழ்கின்றனர். அதேபோன்று முஸ்லிம் அல்லாத நாடுகளிலும் முஸ்லிம்கள் சிறுபான்மையினராக உள்ளனர். இந்தோனேசியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகியவற்றிலே அதிக எண்ணிக்கையான முஸ்லிம்கள் வாழ்கின்றனர். உலகிலேயே அதிக முஸ்லிம்களைக் கொண்டுள்ள நாடு இந்தோனேசியாவாகும். அங்கு 25 கோடி முஸ்லிம்கள் வாழ்கின்றனர். பாகிஸ்தானில் 18 கோடியாகவும், பங்களாதேஷில் 16 கோடியாகவும் உள்ளனர்.

இந்தோனேசியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஈரான், துருக்கி, ஈராக், மலேசியா, உஸ்பகிஸ்தான், சவூதி அரேபியா, அப்கானிஸ்தான், யெமன், சிரியா, கஸகஸ்தான், அஸர்பைஜான், தாஜிகிஸ்தான், ஜோர்தான், கிரிகிஸ்தான், துருக்மேனிஸ்தான், லெபனான், ஓமான், குவைத், கட்டார், பஹ்ரைன், புரூனை, மாலைதீவு, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், பலஸ்தீன் என்பனஇக்கண்டத்திலுள்ள முஸ்லிம் பெரும்பான்மை நாடுகளாகும்.

இவற்றைப் பிராந்தியங்களாகப் பிரித்து நோக்கும்போது தென்மேற்கு ஆசியாவில் 35 கோடி முஸ்லிம்களும் தென்கிழக்காசியாவில் 27 அரைக் கோடி முஸ்லிம்களும் தெற்காசியாவில் 51 கோடி முஸ்லிம்களும் மத்தியாசியாவில் 7 கோடி முஸ்லிம்களும் வாழ்கின்றனர்.

ஆசியாவில் உள்ள 24 நாடுகளில் முஸ்லிம்கள் சிறுபான்மையினராக வாழ்கின்றனர். அதில் இந்தியா, சீனா, பிலிபைன்ஸ் என்பனவற்றில் முஸ்லிம்கள் குறிப்பிடத்தக்களவு வாழ்கின்றமை கவனிக்கத்தக்கது.

ஆசியாவில் முஸ்லிம் சிறுபான்மை பின்வரும் அடிப்படையில் வாழ்கின்றனர்.

1. இந்தியா 20 கோடி.
2. சீனா 15 கோடி.

| | | |
|---|---|---|
| 3. | பிலிபைன்ஸ் | 11,000000 |
| 4. | ஜப்பான் | 1,00000 |
| 5. | வியட்நாம் | 63,146 |
| 6. | தாய்லாந்து | 400,000 |
| 7. | பர்மா | 400,000 |
| 8. | தென்கொரியா | 35,000 |
| 9. | வடகொரியா | 4,000 |
| 10. | நேபாளம் | 971,056 |
| 11. | தாய்வான் | 60,000 |
| 12. | இலங்கை | 2,000,000 |
| 13. | கம்போடியா | 296,000 |
| 14. | இஸ்ரேல் | 2,500,000 |
| 15. | ஹோங்கொங் | 300,000 |
| 16. | லாவோஸ் | 7,000 |
| 17. | ஜியோஜியா | 463,062 |
| 18. | ஆர்மேனியா | 1,000 |
| 19. | மொங்கோலியா | 140,152 |
| 20. | சைப்ரஸ் | 264,172 |
| 21. | பூட்டான் | 7,000 |
| 22. | மகோ | 500 |
| 23. | கிழக்கு திமோர் | 38,000 |

ஆசியாவில் பல்வேறு நாடுகளில் சிறுபான்மையாக சிதறி வாழும் முஸ்லிம்கள் பல்வேறுபட்ட நெருக்கடிகளையும் பிரச்சினைகளையும் எதிர் நோக்குகின்றனர். இந்தியா, சீனா, மியன்மார் ஆகியவற்றில் வாழும் முஸ்லிம்கள் இத்தகைய பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

அரச பயங்கரவாதம், இன குழுமங்களின் ஆதிக்கம், இனத் தேசியவாதம், மத அடிப்படை வாதம் போன்ற பாரிய சவால்களுக்கு ஆசிய சிறுபான்மை முஸ்லிம்கள் முகம்கொடுத்து வருகின்றனர். இந்தியாவில் சுதந்திரத்திற்குப் பின்னர் மாறி மாறி வந்த அரசாங்கங்கள் எதுவும் முஸ்லிம்களின் பிரச்சினையை கவனத்தில் கொள்ளவில்லை. அவர்களின் அபிலாஷைகளை, பாதுகாப்பை, கல்வி ஒதுக்கீட்டை உத்தரவாதம் செய்யவில்லை. சில சமயங்களில் அதிகாரத்திற்கு வந்த சில அரசாங்கங்கள் முஸ்லிம் எதிர்ப்பை அரசியல் ஆயுதமாக கையில் எடுத்தது.

முஸ்லிம்களுக்கெதிரான நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் மூலம் தமது வாக்கு வங்கிகளைப் பாதுகாப்பதற்கு முயற்சித்தனர்; முயற்சித்து வரு கின்றனர். இந்தியாவில் பாரதிய ஜனதா கட்சியின் ஆட்சியில் மட்டுமன்றி, காங்கிரஸ் அரசாங்கத்தின் போதும் முஸ்லிம்கள் இனத் தேசியவாதிகளின் அடக்குமுறைக்கு உட்பட்டனர். மீளவும் பா.ஜ.க மோடியின் தலைமையில் அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளதால் இந்திய சிறுபான்மை முஸ்லிம்கள் பெரும் திணறலுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர்.

சீனாவில் கிழக்கு துர்கிஸ்தானில் பெருமளவு முஸ்லிம்கள் செறிவாக வாழ்கின்றனர். ஒரு காலத்தில் கிழக்கு துர்கிஸ்தான் சுதந்திர முஸ்லிம் குடியரசாக விளங்கியது. சீனாவுடன் அது பலாத்காரமாக



இணைக்கப்பட்டதை அடுத்து முஸ்லிம்கள் சிறு பான்மையாக மாற்றப்பட்டதோடு மத ஒடுக்கு முறை அவர்கள் மீது கட்டவிழ்க்கப்படுகிறது. முஸ்லிம்கள் சுமார் 15 கோடிப் பேர் சீனாவில் வாழ்கின்றனர். இவர்களின் தொகை இதை விட அதிகமாக இருக்குமென்று ஊகிக்கப்படுகிறது. சீன அரசு முஸ்லிம்களின் தொகைக் கணிப்பீட்டை உத்தியோகபூர்வமாக வெளியிடுவதற்குத் தயங்கு கிறது.

முஸ்லிம்களின் கலாசார சுதந்திரம், சமய சுதந் திரம் என்பன திட்டமிட்டு மறுக்கப்படுகின்றன. இரவு தொழுகைக்காக செல்வது தடைசெய்யப் படுகிறது. ஹிஜாப் அணிவது முஸ்லிம் பெண் களுக்கு தடுக்கப்படுகிறது. சில இடங்களில் பன்றி இறைச்சி போன்ற ஹறாமான உணவுகளை உட் கொள்ளுமாறு முஸ்லிம்கள் நிர்ப்பந்திக்கப்படுகின் றனர். இவ்வாறு முஸ்லிம்களின் சமய கலாசார சுதந்திரம் அந்நாட்டில் படுமோசமாக மீறப்பட்டு வருகிறது.

சமீபத்திய ஆசிய முஸ்லிம் சிறுபான்மைக்கான உதாரணங்களில் மியன்மார் முஸ்லிம்கள் குறிப் பிடத்தக்கவர்கள். மியன்மாரில் சுமார் 4 மில்லியன் முஸ்லிம்கள் வாழ்கின்றனர். அவர்களுள் பங்களா தேஷ் பூர்வீகத்தைக் கொண்ட ரோஹிங்யோ முஸ் லிம்கள் கடந்த சில ஆண்டுகளாக இனச் சுத்தி கரிப்புக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். இம் முஸ்லிம்களுக்கு நீண்ட வரலாற்றுப் பூர்வீகம் இல்லை என்றும் அவர்கள் நாட்டை விட்டு வெளி யேற வேண்டும் எனவும் மியன்மாரில் இராணுவ அரசாங்கம் பல்வேறு ஒடுக்குமுறைக் கொள்கை களை அவர்கள் மீது திணித்தது.

2012 இல் இராணுவத்தினரிடமிருந்து அரசாங் கம் ஜனநாயக வழிக்கு திரும்பி விட்டதாக கூறப் பட்டாலும் முன்னைய ஆட்சியாளரே அதிகாரத் தில் நீடிக்கின்றார். ஒரு நிழல் இராணுவ அரசாங் கமே அமுலில் உள்ளது. ஜனநாயக மாற்றம் சிறு பான்மை ரோஹிங்யோ முஸ்லிம்களின் வாழ்வில், சுதந்திரத்தில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்த வில்லை. தொடர்ந்து முஸ்லிம்கள் இம்சிக்கப்படு கின்றனர்.

தாய்லாந்திலும், பிலிபைன்ஸிலும் சிறுபான் மையாக வாழும் முஸ்லிம்கள் நீண்ட காலமாக தமது அரசியல் சுதந்திரத்திற்காக ஆயுத ரீதியான போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர். தாய்லாந் தின் பட்டானி பிராந்தியம் ஒரு காலத்தில் தனிப் பெரும் முஸ்லிம் குடியரசாக விளங்கிய நாடாகும். தாய்லாந்தின் பௌத்த அரசாங்கம் அப்பிராந்தி யத்தை தாய்லாந்துடன் இணைத்தது முதல் முஸ் லிம்களுக்கெதிரான சோதனைகள் ஆரம்பித்து விட்டன. அங்கு பட்டானி முஸ்லிம் விடுதலை



இயக்கம் தமது சமய, கலாசார அரசியல் உரிமை களுக்காக ஆயுதமேந்திப் போராடி வருகின்றது. இதேபோன்று பிலிபைன்ஸில் மின்டானோ, யால பிராந்தியங்களில் செறிவாக வாழும் முஸ்லிம்கள் நீண்ட காலமாக தமது சுயாட்சிக்கான போராட் டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

பிலிபைன்ஸ் மோரோ இஸ்லாமிய விடுதலை முன்னணி, ஸலாமத் ஹாஷிமின் தலைமையில் உருவாக்கப்பட்டது. இன்று அதன் இராணுவப் பலத்தைக் கண்டு அஞ்சும் பிலிபைன்ஸ் அரசாங் கம் அவர்களோடு பேச்சுவார்த்தை நடாத்தி அமைதி ஒப்பந்தமொன்றுக்கு வந்துள்ளது.

ஆசியாவின் சில நாடுகளில் முஸ்லிம்களின் தொகை மிகக் குறைவாக உள்ளது. மகோ, பூட் டான், ஆர்மேனியா, தாய்வான், வட கொரியா, தென் கொரியா, கம்போடியா என்பன இதற்கு உதாரணங்களாகும்.

இந்நாடுகளில் வாழும் முஸ்லிம் சிறுபான்மை பற்றிய ஆழமான ஆய்வுகள் எதுவும் மேற்கொள் ளப் படவில்லை. இந்தோனேஸியாவில் இருந்து பிரிந்து சென்று தனிநாடாக மாறியுள்ள கிழக்கு திமோரில் 38000 முஸ்லிம்கள் உள்ளனர். பூட்டான், லாவோஸ் நாடுகளில் அவர்களின் தொகை 7000 ஆகவும் மகோவில் வெறும் 500 ஆகவும் உள்ளது.

# ரோஹிங்யா முஸ்லிம்கள்




# பிராந்திய அரசியல் சதுரங்க விளையாட்டின் பலிக்கடாய்கள்

எம்.எச்.எம். ஹனான்
MBS, B.Com (Spel), MAAT

ரோஹிங்யா (பர்மா) முஸ்லிம்கள், இன்று உலக செய்திஸ்தாபனங்களின், சமூக வலைதளங்களின் பேசுபொருள். ரோஹிங்யா முஸ்லிம்கள் யார்? அவர்களின் வரலாறு? அவர்கள் படும் அவலங்கள், அவர்களது உரிமைகள் பற்றி ஏராளமாக எழுதப்பட்டுள்ளன. எழுதப்பட்டு வருகின்றன.

இப்பத்தியில் நான் ரோஹிங்யா இனப் பிரச்சினையின் மூலம் பற்றி சில விடயங்களை வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ள முனைகிறேன்.

இந்தப் பிரச்சினையை ஆழமாக விளங்குவதற்காக நாம் மியன்மார் (பர்மா) எனும் நாடு உலக வரைபடத்தில் அதன் அமைவிடம், மியன்மார் கொண்டுள்ள இயற்கை வளங்கள், சர்வதேச, பிராந்திய அரசியலில் அதன் முக்கியத்துவம் ஆகியவற்றைப் புரிந்துகொள்ள வேண்டும்.

அதே போன்று அமெரிக்கா, இஸ்ரேல், இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு மியன்மார் எந்தளவு மூலோபாய முக்கியத்துவம் (Strategic Importance) பெற்றதாக அமைந்துள்ளது என்பது பற்றியும் விளங்கிக்கொள்ள வேண்டும்.

இந்த பின்னணியிலிருந்தே கடந்த நூற்றாண்டு துவக்கம் மியன்மார் பிரச்சினை சர்வதேச அரங்கில் நோக்கப்பட்டு வருகிறது.

### மியன்மாரின் அமைவிடம்

மியன்மார் உலகின் முக்கிய மூன்று ஆதிக்க சக்திகளின் மூலோபாயத் தேவையை நிறைவேற்றக்கூடிய இடத்தில் அமைந்துள்ளது. இந்தியாவுடன் எல்லையை கொண்டுள்ள ஒரே ஒரு ஆசியான் (ASEAN) நாடு மியன்மார் ஆகும். அதே போன்று கிழக்காசிய நாடுகளுக்கான நுழைவாயிலாகவும், இந்தியாவின் கிழக்கை நோக்கிய கொள்கையை (Look East Policy) ஒரு முறைப்படுத்துவதற்கு இன்றியமையாததாகவும், தொடர்பு பாலமாகவும் காணப்படுகிறது. இந்தியாவையும் தாய்லாந்தையும் இணைக்கும் தரைவழிப் பாதை மியன்மார் ஊடாகவே செல்கிறது.

உலக வரைபடத்தில் சீனாவையும், இந்து சமுத்திரத்தையும் தொடர்புபடுத்தும் எந்தப் புள்ளியும் கிடையாது. ஆனால் சீனாவுக்கு இது மிகவும் முக்கியமான ஒன்றாகும். ஏனெனில், சீனாவுக்கான வகை தொகையற்ற சந்தை வாய்ப்புக்களையும், நேரடியாக எரிபொருளை பெறக்கூடிய வாய்ப்புக்களையும் இந்து சமுத்திரத்தினூடான தொடர்பு பெற்றுக் கொடுக்கின்றது.

அது மட்டுமல்லாமல், அபாயகரமான எந்த நேரத்திலும் ஏதாவது ஒரு தடை வரக்கூடிய சாத்தியமான மலாக்கா நீரினை (Strait of Malacca) ஊடான கடல் பாதைக்கு மாற்றீடாகவும் இந்து சமுத்திர தொடர்பு தொழிற்பட முடியும்.

ஏனெனில், மலாக்கா நீரினை ஊடாக வருடாந்தம் 60,000 இற்கும் அதிகமான கப்பல்கள் பயணிக்கின்றன. அதில் அதிகமானவை மசகு எண்ணெய் சரக்குக் கப்பல்களாகும் (Oil Tankers). இவை பாரசீக வளைகுடாவிலிருந்து செல்கின்றன. இவற்றில் ஏற்படும் தடை சீனாவின் பொருளாதாரத்திற்கும், பாதுகாப்பிற்கும் பாரிய சவால்களை கொண்டு வரும். சீனாவின் 80%மான எரிபொருள் இந்த பாதையூடாகவே செல்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவில் புதிய உலக ஒழுங்கு திட்டத்திற்கு ஏற்ப பாரசீக வளைகுடா முதல் தென் சீன கடல் வரை உள்ள அனைத்து கடல் வழிப்பாதைகளையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு மிகப்பெரிய பிரயத்தனம் எடுத்து வருகின்றது. அந்த வகையில் உலகின் மூலோபாய கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மலாக்கா நீரிணையை கட்டுப்படுத்துவதற்கும், கடற்படை செயற்பாட்டுக்கும் மியன்மார் கடற் கரைகள் மிக உறுதுணையாக அமையும். ஆகையால் இந்தக் கடல் பிராந்தியத்தை இராணுவமயப்படுத்துவதற்கு தொடர்ந்தும் அமெரிக்கா செயற்பட்டுக் கொண்டு வருகிறது.




உலகில் யார் மலாக்கா நீரிணையை கட்டுப்படுத்துகிறார்களோ, அவர்கள் சீனாவின் எரிபொருள் விநியோகத்தை கட்டுப்படுத்த முடியும்.

2003 களில் அமெரிக்கா அவ்வாறு மத்திய கிழக்கு நாடுகளில் தனது இராணுவத் திட்டங்களை நடைமுறைப்படுத்திய முறைமைகளை நன்கு அவதானித்த சீனா, மியன்மாரில் தனது வேலைத் திட்டங்களை மும்முரமாக நடைமுறைப்படுத்தியது. சீனாவின் இராணுவ மற்றும் எரிபொருள் முக்கியத்துவம் வாய்ந்த கேந்திர நாடாக மியன்மார் பார்க்கப்பட்டது.

எனவே பல மில்லியன் டொலர்கள் பெறுமதியான இராணுவ உதவிகளை சீனா மியன்மாருக்கு அண்மைக் காலங்களில் வழங்கியது. மேலதிகமாக உள்நாட்டில் பெரும் நெடுஞ்சாலைகளையும், ரயில் பாதைகளையும் கட்டிக் கொடுத்துள்ளது. மிக முக்கியமாக சீனா துருப்புக்களை மியன்மாரில் நிறுத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

மியன்மாரின் கொகோ தீவுகளில் (Coco Islands) சீனா தனக்கான அதி நவீன கண்காணிப்பு கருவிகளை பொருத்தியுள்ளதாகவும், இந்து சமுத்திரத்தினுள் நுழையும் வகையில் தனக்கான கடற்படைத் தளம் ஒன்றையும் கட்டி வருவதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

### மியன்மாரின் பெற்றோலிய வளங்கள்

பிரித்தானிய காலனித்துவ காலம் முதல் மியன்மாரில் எரிபொருள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. 1871 இல் பிரித்தானியா Rangoon Oil Company ஆக பெயர் மாற்றம் பெற்றது. 1970 முதல் மியன்மாரில் எரிவாயு உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. 1990 கள் முதல் வெளிநாட்டு கம்பனிகளுக்கு இத்துறையில் ஈடுபடுவதற்கான அனுமதி வழங்கப்படுகின்றது.

மியன்மாரின் யதானா (Yadana) பிராந்தியத்தில் சுமார் ஐந்து டிரில்லியனுக்கும் (5 Trillion) மேற்பட்ட கியுபிக் அடிகள் (Cubic Feet) கொண்ட எரிவாயு இருப்பு உள்ளதாக கணிப்பிடப்பட்டுள்ளது. இது 30 வருடங்களுக்குப் போதுமானதாகும். அதே போன்று இதே அளவின் மூன்றில் ஒரு பகுதி யெதாகுன் (Yetagun) பிராந்தியத்தில் இருப்பதாகவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதில் இன்னுமொரு சுவாரஷ்யமான விடயம் யாதெனில், 2004 களில் அராகான் கடற்கரைப் பகுதிகளில் -அதாவது தற்போது பேசுபொருளாக ரோஹிங்யா முஸ்லிம்கள் வாழும் பிராந்தியத்தில் மிகப்பெரிய எரிவாயு வயல்கள் காணப்படுவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது ஏற்கனவே உள்ள மியன்மார் எரிவாயு இருப்பின் இரு மடங்காகும்.

2002 இல் பிரித்தானிய கம்பனிகளான Premier Oil மற்றும் Texaco என்பன மியன்மாரில் இருந்து வெளியேறின. தொடர்ந்து மலேசியாவின் PETRONAS கம்பனி Premier Oil கம்பனியின் 27% கொள்வனவு செய்தது.

2004 முதல் மியன்மார் தனது yadana Gas எரிவாயுவை Pipeline ஊடாக தாய்லாந்துக்கு



ஏற்றுமதி செய்து வருகிறது. இது வருடாந்தம் ஒரு பில்லியன் டொலர் (1 Billion Us $) பெறுமதி யானவை. 2005 இல் சீனா, தாய்லாந்து, தென் கொரியா என்பன இணைந்து மியன்மாரின் சக்தி வளத் துறையில் (Oil and Gas) முதலீடுகளை செய்துள்ளன. தற்போது தாய்லாந்தின் மொத்த எரிவாயு தேவையில் 20% ஐ மியன்மார் வழங்கு கிறது.

அரகான் - ரொஹிங்யா பிராந்திய, Shwe Field, எண்ணெய் வயல்களிலிருந்தான் எரிவாயு உற்பத்தி 2009 இல் வெளிவருவதற்கு திட்டமிடப்பட்டி ருந்தன. இது குறித்து இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் பாரிய கருத்து வேறுபாடுகள் காணப் படுகின்றன. எனினும் 2013 ஆண்டு இதில் உற் பத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிராந்தியத்தில் உற்பத்தி செய்யப்படும் எரிவாயு எதிர்வரும் 30 வருடங்களுக்கு, தரைவழி Pipeline ஊடாக மியன்மாரின் சித்வே (Sittwe) ஆழ்கடல் துறை முகத்திலிருந்து சீனாவின் யுனான் மாகாணத்திற்கு (Yunan) (2300 கி.மீ. தூரம்) ஏற்று மதி செய்வதற்கான உடன்படிக்கை ஒன்று செய்யப் பட்டுள்ளது. இது இந்தியாவுக்கு மிகப்பெரிய தோல்வியாகும். ஏனெனில் இந்த எரிபொருட்களை வங்களாதேசம் ஊடாக இந்தியாவுக்கு கொண்டு வர இந்தியா திட்டமிட்டிருந்தது.

இந்த மூலோபாய எரிபொருள் விநியோக மார்க்கம் (China & Myanmar Oil Gas Pipeline) நிறைவுபெற்றால், சீனா தனது மொத்த எரி பொருள் வழங்கல்களுக்கு மலாக்கா நீரிணையில் ஏதேனும் பிரச்சினை தோன்றினால் எந்த தடையு மின்றி ஆபிரிக்க, மத்திய கிழக்கு எரிபொருள் வழங்கல்களை இந்து சமுத்திர வாயில் ஊடாகப் பெற்றுக்கொள்ளும்.

சீனா மூன்று வகையான மூலோபாயங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. Strategic Pipeline. இதனூடாக சீனா தனது எரிபொருள் வழங்கல் மலாக்கா நீரிணையில் தங்கியிருத்தல் என்பதை குறைப்பதோடு அவசரகால நிலைமை களில் பதிலீடாக அமையும்.

## Railway and Road way

இது சீன உற்பத்திகளை மியன்மார் ஊடாக பங்களாதேஷுக்கும், இந்தியாவுக்கும் மற்றும் ஏனைய நாடுகளுக்கும் கொண்டு செல்லும்.

மூலோபாய துறை முகங்கள் - Fort Investments இதில் பங்களாதேஷ் சிட்டகொங் துறைமுகம் இலங்கையின் ஹம்பாந்தோட்டை துறைமுகம் பாகிஸ்தான் கல்தார் துறைமுகம் அதே போன்று மியன்மாரின் சித்வே துறைமுகம். இவைகளூடாக சீனா இந்து சமுத்திரத்தில் தனது கடற்படைப் பயணங்களை செய்வதற்கும், கடற்படை கப்பல் கள் தரித்து நிற்பதற்குமான ஒழுங்குகள் செய்யப் பட்டுள்ளன.

மேற்கூறிய துறைமுகங்கள் சீனாவின் "Spring of Pearls Strategy" இந்து சமுத்திரத்துக்கான சீனா வின் மூலாபாய திட்டத்துடன் தொடர்பு பட்டவை இந்தப் பின்னணியில் சீனாவின் பிராந்திய வல்ல மையை முறியடிப்பதற்கும், இந்து சமுத்திரத்தில் சீனாவின் ஊடுருவலை தவிர்ப்பதற்கும் உலகின் ஏனய சக்திகள் பல திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன.

அமெரிக்காவின் (Strategy of Engagement) தென்கிழக்காசிய நாடுகளுடனான உறவாடல் என்பது சீனாவின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்து வதற்கான மிக முக்கியமான மூலோபாயம் ஆகும். இந்த இடத்தில் அமெரிக்க நலன்களும், இந்தியா வின் நலன்களும் ஒன்றுபடுகின்றன. சீனாவை கட்டுப்படுத்துவதில் இந்தியாவுக்கும், அமெரிக் காவுக்கும் மிக நெருங்கிய ஒத்துழைப்பு காணப் படுகின்றது.

### அமெரிக்க அணுகுமுறைகள்

அண்மைக் காலமாக அமெரிக்காவின் பல் வேறு நிறுவனங்கள் அமெரிக்காவின் மூலோ பாயத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. அவை உலகின் பல நாடுகளில் ஆட்சி மாற்றங்களை செய்வதற்குப் பின்னணியாக இயங்கி வருகின்றன.

National Endowment For Democracy (NED)

George Soros Open Society Institute,

Freedom House

Gene Sharp's Albert Einstein Institution என்பன பிரதான நிறுவனங்களாகும். இவை பல்வேறு நாடுகளில் எதிர்கட்சி அல்லது மாற்றுக் கருத்து உள்ளவர்களை ஒன்று திரட்டி பல்வேறு பயிற்சி களை வழங்கி அந்தந்த நாடுகளில் வித்தியாசமான எதிர்ப் பிரச்சாரங்களையும், ஆட்சி கவிழ்ப்பு நட வடிக்கைகளையும் செய்து வருகின்றன.

உக்ரைனின் Orange Revolution ஜோர்ஜியாவில் Rose Revolution, தாய்லாந்தில் இடம்பெற்ற Piuk or yellow ஆர்பாட்டங்களின் தொடர்ச்சியாகவே மியன்மாரின் "Saffron Revolution" காணப்படு கின்றது. இங்கு பல வழிமுறைகள் பயன்படுத்தப் பட்டுள்ளன.

Hit and run Protests

Internet blogs, Facebook, SMS Links

ஒழுங்குபடுத்தப்பட்ட ஆர்பாட்டக் குழுக்கள் இவை திடீரென்று கூடும், திடீரென்று கலைந்து விடும். எனவே குறித்த நாடுகளில் பல்வேறு குழப்பங்கள் தோற்றுவிக்கப்படும்.

2003 ஆம் ஆண்டு முதல் அமெரிக்க நிறுவனங் கள் மியன்மாரில் தொழிற்பட்டு வருகின்றன. அவை நாட்டின் முக்கிய புள்ளிகளை, கருத்துரு வாக்க சக்திகளை நாட்டின் பல்வேறு நிறுவனங் களிலிருந்து தேர்ந்தெடுத்து, பயிற்சிகளை வழங்கி வந்துள்ளது. வருடாந்தம் 2.5 மில்லியன் டொலர் கள் இதற்காக முதலிடப்பட்டுள்ளது. சிலபோது தெரிவு செய்யப்பட்ட பலர் அமெரிக்காவுக்கு கொண்டு செல்லப்பட்டு பயிற்சியளிக்கப்பட் டுள்ளனர்.

### மியன்மாரில் யூதர்கள்

மியன்மாரில் பர்மிய மக்களுக்கு உரிய எல்லா விதமான சம உரிமைகளையும் கொண்ட ஒரே ஒரு சிறுபான்மை இனம் இங்குள்ள யூதர்களாகும். அதே வேளை அங்குள்ள கிறிஸ்தவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் உள்ள உரிமைகள் பறிக்கப் பட்டு வருகின்றன.




மியன்மாரில் யூதர்கள் மேயர்களாகவும் நிய மிக்கப்பட்டிருந்தனர். அதே போன்று மியன்மார் பொருளாதாரத்தை கட்டுப்படுத்துவதில் சர்வதேச யூத சக்திகள் மிகுந்த ஈடுபாடு காட்டுகின்றன.

Robert Icagan அமெரிக்க அரசுக்கான முக்கிய திட்டங்களை முன்வைத்தவர். இவர் முக்கிய சியோனிஸ கருத்துருவாக்க சக்தியாக செயற்படு பவர். இவரே சீனாவின் செல்வாக்கை கட்டுப் படுத்துவதற்கான மூலோபாயத் திட்டத்தின் கருத் துருவாக்கத்தை செய்தவர்.

எனவே மியன்மாரில் மேற்கொள்ளப்படும் எல்லாவிதமான திட்டங்களிலும் அமெரிக்க - இஸ்ரேல் கூட்டுச் செயற்பாடு காணப்படுகின்றது.

இவைகளின் வெளிப்பாடே மியன்மாரின் 969 இயக்க தீவிரவாத நடவடிக்கைகளாகும்.

2011 முதல் மியன்மாரில் 969 தீவிரவாத இயக் கத்தால் பல்வேறு இன அழிப்பு நடவடிக்கைகள் நடாத்தப்பட்டு வருகின்றன. இவர்களுடைய முழுமையான இலக்கு முஸ்லிம்களும், சீனாவின் கட்டுமானங்களுமாகும்.

இன்னுமொரு தகவலின் படி, இஸ்ரேலின் மபாத் (Mafah) (Isreali Administration for the Development of Weapons and Technological Infrastructure) ஆளில்லா நீர்மூழ்கி கப்பல்களை (Drone & Subs) வடிவமைத்து வருகிறது. 2020 இல் இவை அறிமுகம் செய்யப்பட உள்ளன. இதன் மூலம் கடல் வழிப் பாதைகளான அரபியக் கடல், வங்காள விரிகுடா ஆகிய பிராந்தியங்களில் இஸ்ரேலிய ஆதிக்கத்தைக் கொண்டுவரத் திட்ட மிட்டுள்ளது.

எனவே மியன்மாரில் முஸ்லிம் எதிர்ப்பு என் பது இஸ்ரேலிய மற்றும் அமெரிக்க சக்திகளின் வெளி வடிவம் என்பதைப் புரிந்துகொள்ள முடி யும்.

ஆகவே மியன்மார் - ரொஹிங்யா முஸ்லிம் களின் பிரச்சினையை வெறுமனே உள்நாட்டு பிரச்சினையாக மட்டும் பார்க்கக் கூடாது.

இதன் பின்னணியில் சர்வதேச சக்திகள் உள் ளன. பெரும் பொருளாதார நலன்கள் காணப்படு கின்றன. சக்தி வளங்களை ஆக்கிரமிக்கும் திட்டங்கள் உள்ளன.

இந்த சதுரங்க விளையாட்டில் அப்பாவி ரொஹிங்யா முஸ்லிம்கள் பலிக்கடாய்களாக ஆக் கப்பட்டு வருகின்றனர். இவர்களைக் காப்பாற்ற எந்த சக்திகள் முன்வரும் என்பதற்கு காலம்தான் பதில் கூறும்.



# ரோஹிங்யா இன அடையாளம்

மியன்மாரில் மூன்று பிரதான இன முஸ்லிம்கள் வாழ்கின்றனர். மொத்த சனத்தொகையில் முஸ்லிம்கள் 6 முதல் 10 வீதம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால், இது குறித்த துல்லியமான மதிப்பீடுகள் இல்லை. சுமார் 4 மில்லியன் முஸ்லிம்கள் உள்ளதாக சில இணையங்கள் கூறுகின்றன.

பிரதான மூன்று இனக் குழுமங்கள்

1. பான்தாய் (பர்மிய பூர்வீகக் குடிகள்)
2. பஷூஷ் (சீன, தாய்லாந்து பூர்வீகத்தினர்)
3. ரோஹிங்யா (இந்திய பூர்வீகத்தினர்) தற்போதைய பங்களாதேஷ் மக்களுக்கு நெருக்கமானவர்கள். இவர்களே இன்று இனச்சுத்திகரிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

பிரான்ஸிய நாடுகாண் பயணி ஒருவர் 1771 இல் தயாரித்த புவியியல் வரைபடத்தில் பயன்படுத்தியுள்ள 'ரூசாங்' எனும் சொல்லிலிருந்தே ரோஹிங்யா எனும் சொல் தோன்றியதாக அறியப்படுகின்றது. பர்மிய சாம்ராஜ்யத்தில் பேசப்படும் மொழிகள் பற்றிய ஓர் ஒப்பீட்டாய்வு எனும் பிரபல நூலில், இப்பிரான்ஸிய ஆய்வாளர் இச்சொல்லைப் பயன்படுத்துகின்றார்.

இங்கு வாழ்ந்து வந்த வங்காளி பூர்வீக மக்கள் தம்மை 'ரவாங்கிய' என அழைத்து வந்தனர். இதுவே காலப் போக்கில் ரோஹிங்யா என மருவியதாகக் கூறப்படுகின்றது. இன்னொரு ஆய்வின்படி 'ரூஹாங்' என்பது அரக்கானின் பண்டைய பெயராகும். இதன்படி அரக்கானில் வாழ்ந்த பூர்வீகக் குடிகளான முஸ்லிம்களைக் குறிப்பதற்கு ரோஹிங்யா எனும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

இவர்கள் அறேபிய, மொரோக்கோ, துருக்கிய, பாரசீக, மங்கோலிய, வங்காள பூர்வீகத்தைக் கொண்டவர்கள். பெரும்பாலானவர்கள் இந்திய துணைக் கண்டத்தைச் சார்ந்தவர்கள். நிறமும் உடற் கூற்றமைப்பும் அவர்களின் இந்திய துணைக் கண்ட மானிடவியற் பண்புகளைப் பறைசாற்றுகின்றன. இவர்களின் மூதாதையர்கள் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்பாக அரக்கானில் வந்து குடியேறியுள்ளனர். கடந்த 10 நூற்றாண்டுகள் வரலாற்றுப் பூர்வீகம் இவர்களுக்கு உள்ளது.

கி.பி. 788 முதல் 810 ஆம் ஆண்டு வரை பர்மாவை ஆட்சி செய்த மாஹ்தான் சான்தாய் எனும் மன்னனின் காலத்தில் வங்காள விரிகுடாவினூடாக முஸ்லிம் வர்த்தகர்களின் கப்பல் மியன்மாரை தரிசித்துள்ளது. இக்கப்பல் அரக்கான் கரையோரத்தில் வங்காள விரிகுடாவுக்கு சமீபத்தில் இயந்திர கோளாறுக்கு உட்பட்டதால் அதில் வந்த அறேபிய முஸ்லிம் பயணிகள் அரக்கானி லுள்ள ரஹ்மபீ எனப்படும் தீவில் தஞ்சமடைந்தனர். அவர்கள் அங்கு தஞ்சமடைந்திருந்த வேளை, தங்களைக் காப்பாற்றுமாறு உதவி தேடி ரஹ்மா, ரஹ்மா என அழைத்தனர்.

அருகிலிருந்த ராமூரி தீவு மக்கள் இவர்களைக் காப்பாற்ற விரைந்தனர். எனினும், அவர்கள் பேசிய மொழியை இவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. ரஹ்மா என அவர்கள் அழைத்த சொல்லே காலப்போக்கில் முஸ்லிம்களை அழைப்பதற்கு 'ரூஹாங்' என மாறியதோடு, பிற்பட்ட காலங்களில் ரோஹிங்யா என மருவியதாகவும் கூறப்படுகின்றது. இவ்வாறு ரோஹிங்யா இன முஸ்லிம்களின் வரலாறு குறித்துப் பல்வேறு அபிப்பிராயங்களும் கருத்துக்களும் முன்வைக்கப்படுகின்றன.


# இனப்படுகொலையின் வாயிலில் நிற்கும் ரோஹிங்யா முஸ்லிம்கள்

அ.மு.செய்யது
இளந்தமிழகம் இயக்கம்

மியன்மாரின் ரக்கான் மாகாணத்தில் ஒரு சிறுபான்மை யினராக ரோஹிங்யா முஸ்லிம்கள் வாழ்கிறார்கள். ரோஹிங்யா என்பது அவர்கள் பேசும் மொழி. இம்மக்கள் பர்மிய நாட்டின் மண்ணின் மைந்தர்கள் என்பதை சாட்சியங்களோடு நிறுவும் ஏராளமான வரலாற்றுக் குறிப்புக்கள் இருப்பதாக சமூக மனித உரிமைப் போராளியும் இனவெறி எதிர்ப்பாளருமான டெஸ் மாண்ட் டூட்டு குறிப்பிடுகிறார்.

இருந்தாலும் அவர்கள் வங்க தேசத்திலிருந்து சட்ட விரோத மாக பர்மாவில் குடியேறியவர்கள் என்றும் அவர்கள் பௌத்தத் திற்கு எதிரானவர்கள் என்றும் கூறி, அவர்கள் மீது கடும் வன்முறையைத் தொடர்ந்து கட்டவிழ்த்து விடுகின்றது.

பர்மிய அரசும் அதனைப் பின்னின்று இயக்கும் பௌத்த பேரினவாதமும் வரலாற்று ரீதியாக சில வேறுபாடுகள்



இருந்தாலும், ஈழத்தில் ரோஹிங்ய முஸ்லிம்கள் இன்று அனுதினமும் அனுபவிக்கும் கொடுமைகள் அடிப்படை ஒற்றுமை என்னவென்றால், இரு பக்கங்களிலும் இனக்கொலையை அரங்கேற்றவது பௌத்த பிக்குகள்தான். வரலாற்று அநீதியின் இருண்ட இப்பக்கங்களை உலகம் மிக வேகமாக புரட்டிக் கொண்டிருக்கிறது.

1982 ஆம் ஆண்டு மியான்மாரில் ஜெனரல் நேவின் அரசு, ரோஹிங்ய இன மக்களுக்கான குடியுரிமையை மறுத்தது. 'ரோஹிங்யா' என்ற சொல்லைக் கூட பயன்படுத்த அவர்களுக்கு தடை விதிக்கப்பட்டது. 'வங்காளிகள்' என்றுதான் அவர்களை அழைக்க வேண்டும் எனச் சட்டம் இயற்றப்பட்டது. இதன் மூலம் மியான்மார் மக்களிடையே இச்சிறுபான்மை இனத்தவரை 'வந்தேறிகள்' என அடையாளப்படுத்தி, அந்நியப்படுத்தும் திட்டம் வெற்றிகரமாக முடுக்கி விடப்பட்டது.

ரோஹிங்யா இன முஸ்லிம்கள், ஒரு பௌத்த மதப் பெண்ணை பாலியல் வல்லுறவு செய்து விட்டார்கள் என ஒரு வதந்தி பரப்பபட்டு, ரோஹிங்யா இன மக்களின் மீது வெறுப்பு விதைக்கப்பட்டது. 2012 ஆம் ஆண்டு, ஜூன் 10 ஆம் நாள் மியான்மார் அரசு அவசரநிலை பிரகடனம் செய்ததை அடுத்து, அரக்கான் பௌத்தர்கள் அதை வசதியாகப் பயன்படுத்திக் கொண்டனர்.

ஊரடங்கு உத்தரவினால் வீட்டிற்குள்ளே முடங்கிக் கிடந்த ஆயிரக்கணக்கான ரோஹிங்யா முஸ்லிம்களைக் கொன்றனர். எஞ்சியவர்களை வீட்டை விட்டு விரட்டியடித்தனர். வீடுகள், கடைகள், கல்வி நிலையங்கள், வங்கிகள் என அனைத்தும் அடித்து நொறுக்கப்பட்டன. இராணுவமும் காவல்துறையும் இத்தாக்குதல்களுக்கு துணை நின்றது.

உள்நாட்டில் வாழ வழியின்றி உயிருக்குப் பயந்து படகுகளில் தப்பியோடிய ரோஹிங்ய முஸ்லிம்கள் வங்கதேசத்தின் கதவுகளைத் தட்டினர். ஏற்கனவே 3 லட்சம் அகதிகள் வங்கதேசத்தில் இருப்பதாக, அவர்களை ஏற்க மறுத்து விட்டது வங்கதேச அரசு.

நடுக்கடலில் படகுகளில் உணவின்றி, நீரின்றி எண்ணற்ற மக்கள் உயிரிழந்தனர். இந்தோனேசியா, மலேசியா, தாய்லாந்து என ஒவ்வொரு நாட்டின் கதவுகளை அவர்களைத் தட்டிக் கொண்டே இருக்கின்றனர். இதில் மலேசியா தாய்லாந்து எல்லைப் பகுதியில் ஆள் கடத்தல் குப்பலிடம் சிக்கி பலர் அவதிப்பட்டும், உயிரிழந்தும் வருகின்றனர்.

இந்நிலையில் அண்மையில் தாய்லாந்து - மலேசியா எல்லைப் பகுதியில் கைவிடப்பட்ட பல ஆள்கடத்தல் கும்பல்களின் முகாம்களும் அங்கு சடலங்கள் பல புதைக்கப்பட்டு இருப்பதும் தெரிய வந்தது. எப்படியும் இறப்போம் எனத் தெரிந்தும் கூட்டங் கூட்டமாக அவர்கள் படகுகளில் ஏறுவதற்கு யார் காரணம்?

''ரோஹிங்கிய முஸ்லிம்கள் பௌத்தத்தை மதிக்காதவர்கள். அவர்கள் இம்மண்ணில் வாழத் தகுதியற்றவர்கள்'' என்று அறைகூவல் விடுப்பதன் மூலம் பௌத்த பேரின வாதம் அவர்களைத் தரம் பிரித்து அவர் களை முற்றாக அழித்தொழிக்கும் செயல் திட்டத்திற்கு வந்து விட்டது.





மியான்மரில் 1.3 மில்லியன் மக்கள் தொகை கொண்ட ரோஹிங்ய மக்கள் ஒடுக்குமுறைகளுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். வாக்குரிமை கிடையாது. உயர் கல்வி, மருத்துவம், வேலை, கடவுச் சீட்டு என எதுவும் அவர்களுக்கு கிடையாது. உள்நாட்டிலேயே ஓரிடத்தி லிருந்து இன்னொரு இடத்திற்கு இடம் பெயர அரசிடம் அனுமதி பெற வேண் டும். திருமணம் செய்துகொள்ள இரா ணுவத்தின் நான்கு எல்லைகளிடமும் அனுமதி பெற வேண்டும். 2 குழந்தை களுக்கு மேல் அவர்கள் குழந்தை பெற் றுக் கொள்ளக் கூடாது. அவர்கள் நிலங்களை அரசு நினைத்தால் பிடுங்கிக் கொள்ளவும் முடியும்.

பாலம் கட்டுதல், பாதைகளை சீரமைத்தல் மற் றும் அபாயகரமான கடினமான வேலைகளில், குறைந்த கூலியில் கொத்தடிமைகளாக வேலை செய்ய ரோஹிங்ய முஸ்லிம்கள் நிர்பந்திக்கப் படுகிறார்கள். 7 வயது குழந்தைகள் முதல் இத்த கைய தொழில்களில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். இது மட்டுமின்றி, காவல்துறை நினைத்தால், எந்நேரமும் இம்மக்களின் வீடுகளில் புகுந்து சோதனை செய்யும் ஒன்றாகக் கூடினால் துப்பாக் கிச் சூடும் நடத்தியும் கொலை செய்யும்.

இத்தகைய கொடும் ஒடுக்கு முறைகளுக்கு மத்தியில் வாழ்ந்து வரும் ஒரு சமூகம் கொதித் தெழுவது இயல்பு, ஆனால் அவர்களை வழி நடத்த, பலஸ்தீனத்தைப் போல, ஈழத்தைப் போல ஒரு தலைவன் உருவாகியிருக்கவில்லை. ஆங் சாங் சூகி இருக்கிறார். ஆனால் அவர் அமைதி யாக இருக்கிறார். 2013 இல் பிபிசிக்கு அளித்த ஒரு நேர்காணலில் வன்முறைக்கு இரண்டு தரப்புமே காரணம் என அநியாயமாக உண்மையை மறுக்கி றார். இதற்கு அவர் மௌனமாகவே இருந்திருக்க லாம் என்று தோன்றுகிறது.

இரு தரப்புமே பாதிப்புகளுக்கு உள்ளாக்கப்படு வதாக அவர் கூறும் குற்றச்சாட்டு துளியும் உண் மையில்லை. ரோஹிங்கியா மக்களைப் போல, பௌத்தர்கள் நாடு நாடாக நடுக்கடலில் தத்தளிக்க வில்லை. பௌத்தர்கள் ஒரு போதும் மியன்மாரின் அகதி முகாம்களில் தடுப்புக் காவலில் வைக்கப் பட்டதில்லை. உலகிலேயே கடுமையாக ஒடுக்கப் படும் ஒரு சிறுபான்மை இனமாக, ஐ.நா.வால் பௌத்தர்கள் அடையாளப்படுத்தப்படவில்லை.

பசியிலும் நோயிலும் அவர்கள் செத்து மடிய வில்லை. இனக்கொலைக்கும் ஆட்கடத்தலுக்கும் அவர்கள் இரையாகவில்லை. பிறகு ஏன் ஆங் சாங் சூகி பேரினவாத பௌத்தர்களையும் ஒடுக்கப் படும் ரோஹிங்ய முஸ்லிம்களையும் ஒரே தட்டில் வைத்து எடை போடுகிறார். மிக மோசமான இக் கையறு நிலைக்கு நிச்சயம் ஆங் சாங் சூகியால் தீர்வு காண முடியும் என தலாய் லாமா தெரி வித்திருக்கிறார்.

கடந்த காலங்களில் இது குறித்து சூகிடம் பேசும்போது இந்த விவகாரம் மிகவும் சிக்கலா னது என்றும் பர்மியர்கள் வாழும் நாட்டில், இதனை கையாள்வதில் பல பிரச்சினைகள் இருப் பதாகவும் சூகி தன்னிடம் தெரிவித்ததாகவும் தலாய் லாமா கூறுகிறார்.

25 ஆண்டுகளுக்கு முன்பு சூகி சமாதானத் துக்கான நோபல் பரிசு வென்றதை ரோஹிங்ய இன மக்கள், இன்று முற்றிலுமாக மறந்து விட்டி ருப்பர். சர்வாதிகாரத்தை எதிர்த்து ஜனநாயகத் துக்காகவும் மனித உரிமைகளுக்காவும் போராடிய ஒரு தலைவர், கடந்த சில ஆண்டுகளாகவே பெரும்பான்மை பௌத்த இன மக்களின் பக்கமே நின்று பேசி வருகிறார்.

ரோஹிங்கியா இன மக்கள் ஒடுக்கப்படுவது குறித்துப் பேசினால், 2016 அதிபர் தேர்தலில் தனக்கு ஆதரவான பௌத்த வாக்குகள் குறைந்து விடுமோ என்பது சூகியின் கணக்கு. மேலும் தான் தேர்தலில் நிற்கவே இராணுவத்தின் ஆதரவு தேவை என்பதால், ஒரு இனப்படுகொலையை முழுமையாக வெளிப்படுத்தவோ, கண்டனம் தெரிவிக்கவோ அவருடைய அரசியல் இலாப நட்டக் கணக்கு இடம்கொடுக்கவில்லை.

கொள்கைகளை விட பதவியும் அதிகாரமும் சூகிக்கு முதன்மையாகப்படுகின்றன. கண்ணெ திரே மற்றுமோர் இனப்படுகொலையை நோக்கி இவ்வுலகம் சென்று கொண்டிருக்கிறது. அநீதிக் கெதிரான வார்த்தைகளற்ற மௌனமும் ஒரு இனப்படுகொலை தானே. மௌனம் தான் வன் முறையின் மறுவடிவமாக, புத்த பிக்குகளின் கொலைக்கரங்களில் அவதாரம் எடுக்கிறது.



# யெமன்: எதிர்
# இறுதியில்

கடந்த செப்டம்பரில் ஹூதி கிளர்ச்சியாரளர்கள் யெமன் தலைநகர் உள்ளிட்டு முக்கிய பிராந்தியங்களை கைப்பற்றியதை அடுத்து கிளர்ச்சியாளர்களை இலக்கு வைத்து சவூதி தலைமையிலான கூட்டணி கடந்த மார்ச் மாதம் முதல் ஆகாய வழித் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றது. கிளர்ச்சியாளர்களை இராணுவ ரீதியில் பலவீனப்படுத்துவதும் பேச்சுவார்த்தை மேசைக்கு அவர்களை நிர்பந்திப்பதும் இத்தாக்குதலின் குறிக்கோள் எனக் கூறப்பட்டது. ஆனால் ஹூதி கிளர்ச்சியாளர்களின் முன்னேற்றம், அதனைத் தொடர்ந்து நடத்தப்பட்ட தாக்குதல்கள், அவை அனைத்தும் ஒட்டுமொத்த யெமனின் எதிர்காலத்தை முற்றிலும் கேள்விக்குறியாக்கும் என்று நாம் எதிர்பார்த்த துயரம் இப்போது நிகழ்ந்து வருகின்றது.



றவூப் ஸெய்ன்
zainrauff@gmail.com

### தற்கொலைக் குண்டுத்தாக்குதல்கள்

தலைநகர் சன்ஆவில் இராணுவ வைத்தியசாலை ஒன்றை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட கார் குண்டுத்தாக்குதலில் குறைந்தது 28 பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதில் 20 பேரளவில் காயமடைந் துள்ளனர். இணையத்தில் அறிக்கை வெளியிட்டுள்ள ஐ.எஸ்.ஐ.எஸ் பயங் கரவாதிகள் இத்தாக்குதல்களுக்கு உரிமைகோரியுள்ளனர்.

யெமன் தலை நகரிலுள்ள ஷீஆ கூட்டையே (Shia Nest) தாம் இலக்கு வைக்க திட்டமிட்டிருந்ததாக ஐசிஸ் தீவிரவாதிகள் அவ்அறிக்கையில் தெரி வித்துள்ளனர். ஹூதி கிளர்ச்சியாளர்களின் தலைவர்களான பைஸல் மற்றும்



# பார்த்த துயரம் நிகழ்கின்றது

ஹமீத் என்போரே இலக்குவைக்கப்பட்டவர்கள். தாக்கு தலை அடுத்து நகரத்தின் மத்திய பகுதிக்கான நுழைவாயிலை கிளர்ச்சியாளர்கள் மூடியுள்ளனர்.

சவூதி அறேபிய தலைமையிலான கூட்டணி பதவி கவிழ்க்கப்பட்ட அப்துர் றப் மன்சூர் ஹாதியை மீண்டும் பதவியில் அமர்த்தியதோடு ஹூதி கிளர்ச்சியாளர்களுக்கெதிரான தாக்குதல்கள் தொடர்கின்றது. ஆயினும் மூன்று மாதங்கள் கடந்த நிலையிலும் ஹூதிகள் களத்திலிருந்து பின்வாங்கவில்லை. அதேவேளை இராணுவ நடவடிக்கை தீவிரமடைந்துள்ளது. அவர்கள் ரொக்கட் தாக்குதல்களையும் நடாத்தி வருகின்றனர். சவூதி இராணுவ தளத்தின் மீது மிஷைல் தாக்குதல்களை தொடர்வதாக கிளர்ச்சியாளர்களின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

### ஐசிஸ் பயங்கரவாதிகளின் ஊடுருவல்

யெமன் பிரச்சினைக்கு தீர்வு காணும் ஜெனீவா பேச்சுவார்த்தை களை கட்டியுள்ள நிலையில், ஐசிஸ் தீவிரவாதிகள் யெமனில் ஊடுருவியிருப்பது ஏற்கனவே ஊர்ஜிதப்படுத்தப்பட்டது. தற்போது நாட்டின் ஷீஆ - சுன்னி மோதலை ஆயுத ரீதியான கட்டத்திற்கு நகர்த்தும் நடவடிக்கையில் ஐசிஸ் தீவிரவாதிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

ஹூதி கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் அவர்களின் தலைமைக் காரியாலயம் மற்றும் பள்ளிவாயல்களை இலக்குவைத்து ஐசிஸ் பயங்கரவாதிகள் தாக்குதல்களை முடுக்கிவிட்டுள்ளனர். இதற்கு முன்னர் மூன்று பள்ளிவாயல்கள் மீது தொடராக நடாத்தப்பட்ட

தாக்குதல்களிலும் பலர் கொல்லப்பட்டனர். சன்ஆவில் ஹூதிகள் நடாத்திய தாக்குதல்களுக்குப் பழிவாங்கும் முகமாகவே இத்தகைய குண்டுத் தாக்குதல்களை நடாத்தியதாக ஐ.சிஸ் நியாயப் படுத்தியுள்ளது. யெமனில் உள்ள ஸைதிப் பிரிவைச் சேர்ந்த ஷீஆக்களின் பள்ளிகளே இலக்கு வைக்கப்படுகின்றது.

**ஜெனீவா பேச்சுவார்த்தை**

அனைத்து தாக்குதல்களையும் நிறுத்தி சம்பந்தப்பட்ட தரப்புக்களை பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டுவரும் நோக்கோடு ஜெனீவாவில் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டு வருகின்றன. யெமனுக்கான ஐ.நா.வின் விஷேட தூதுவரும் மொரிட்டானிய இராஜதந்திரியுமான இஸ்மாயில் வூல்த் ஷெய்க் அஹமத் கிளர்ச்சியாளர்களோடு தனிப்பட்ட முறையில் பேச்சுக்களை நடாத்தியுள்ளார். எனினும் ஜெனிவா பேச்சுவார்த்தை எந்த தரப்பையும் திருப்திப்படுத்தவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

மனிதாபிமான போர் நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ளும் முயற்சிக்கு இரு தரப்பினரையும் இணங்க வைப்பது கடினமாகியுள்ளது என்று இஸ்மாயில் வூல்த் அல்-ஜெஸீரா பெட்டக நிகழ்சியில் தெரிவிக்கின்றார். ஹூதி கிளர்ச்சியாளர்களும் முன்னாள் ஆட்சியாளர் அலி அப்துல்லாஹ் ஸாலிஹின் விசுவாசப் படையினரும் தற்காலிக போர் நிறுத்தத்திற்கு ஆதரவளிக்கின்றபோதும் அப்துர்றப் மன்சூரின் அரசாங்கத்தினால் கோரிக்கை விடுக்கப்படும் பிரதேசங்களில் இருந்து பின்வாங்கிச் செல்வதற்கு மறுக்கின்றனர்.



நாடு கடந்து சவூதி அரேபியாவில் தஞ்சம் கோரியுள்ள ஜனாதிபதி அப்துர் ரப் மன்சூர். அப்துல்லாஹ் ஸாலிஹ் பதவி கவிழ்க்கப்பட்ட பின்னர் ஜனாதிபதியானவர்.

**“இதுபோன்ற தாக்குதல்களே இங்கு பெரும்பாலும் நடத்தப்படுகின்றன. இலக்குகள் எதுவும் எட்டப்படாமல் யெமனின் தேசிய வளமும் கீழ்க் கட்டுமானமுமே அழிக்கப்படுகின்றன.”**

**ஹாக்கிம் அல் மஸ்மாரி,**
யெமன் போஸ்ட் பத்திரிகையின் பிரதம ஆசிரியர்

தாம் கைப்பற்றிய பிராந்தியங்களிலிருந்து தம்மால் பின்னோக்கிச் செல்ல முடியாதென்றும் அவ்வாறு பின்வாங்கினால் அல்கைதா அமைப்பு அவற்றை கைப்பற்றிவிடும் என்றும் ஹூதி கிளர்ச்சியாளர்கள் தெரிவித்து வருகின்றனர். எனவே பின்வாங்குவதாயின் இப்பிராந்தியங்களுக்கான உத்தரவாதத்தை யெமன் இராணுவம் வழங்க வேண்டும் என்று அவர்கள் நிபந்தனை இடுகின்றனர்.

இதற்கிடையில் வெளிநாட்டில் இருக்கும் யெமன் அரசாங்க வெளிவிவகார அமைச்சர் ராஇத் யாஸீன் கிளர்ச்சியாளர்களின் பின்வாங்கல் குறித்து எந்தப் பேச்சுவார்த்தையும் இல்லை. அவர்கள் பின்வாங்கத்தான் வேண்டும். பாதுகாப்புச் சபையின் 226 ஆம் தீர்மானத்தின் பிரகாரம் போர் நிறுத்தம் சாத்தியமாக வேண்டுமாயின் கிளர்ச்சியாளர்கள் பின்வாங்க வேண்டும்.

**வளைகுடா ஒப்பந்த நாடுகளின் கூட்டணியும் இலக்கை எட்டாத தாக்குதல்களும்**

மார்ச் 26 இலிருந்து சவூதி தலைமையிலான வளைகுடா ஒப்பந்த நாடுகள் ஹூதிகளுக்கெதிரான ஆகாய வழித்தாக்குதல்களை நடாத்தி வருகின்றன.

சவூதி அறேபியாவிற்கு தப்பியோடிய யெமன் ஜனாதிபதி அப்துர் றப் மன்சூர் ஹாதியின் வேண்டுகோளுக்கிணங்கவே இந்த இராணுவ நடவடிக்கையில் கூட்டணி இறங்கியதாக சம்பந்தப்பட்ட நாடுகள் தெரிவிக்கின்றன. அந்நாட்டின் இஸ்லாமியவாதிகளும் இதற்கு ஆதரவளித்தனர்.

சர்வதேச ரீதியில் இத்தாக்குதலுக்கான ஆதரவை முஸ்லிம் அல்லாத சில நாடுகளும் வழங்கின. பெல்ஜியம், பிரான்ஸ், அமெரிக்கா, ஐக்கிய ராஜ்யம் என்பன அவற்றில் குறிப்பிடத்தக்கன. பிராந்தியத்தில் வேகமாக வளர்ந்து வரும் ஈரானின் செல்வாக்கையும் ஷீஆயிஸத்தின் பரவலையும் தடுத்து நிறுத்துவதே இத்தாக்குதலுக்கான முஸ்லிம் உலக நியாயமாகக் கருதப்படுகின்றது.

கொள்கை அளவில் இத்தீர்மானம் சரியானதே என்பதில் சந்தேகமில்லை. ஆயினும் இராணுவ நடவடிக்கைகளின் நீண்டகால விளைவுகள் பற்றிய முன்னெச்சரிக்கை இல்லாமலேயே இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இருக்கும் நிலையை இன்னும் மோசமாக்குவதற்கும் பாரிய குழப்பங்களை உருவாக்குவதற்குமே இத்தாக்குதல்கள் இன்று வகை செய்துள்ளன என்பதையே ஐ.சிஸ் பயங்கரவாதிகளின் ஊடுருவலும் தாக்குதல்களும் நிரூபித்துள்ளன.

ஹூதிகளை இத்தாக்குதல்கள் பலயீனப்படுத்தவில்லை. பின்வாங்கச் செய்யவும் இல்லை. அவர்களின் கட்டுப்பாட்டிலுள்ள பிராந்தியங்கள் விடுவிக்கப்படவும் இல்லை. இராணுவ ரீதியான தந்திரோபாயங்களிலுள்ள கோளாறு மட்டுமே இதற்கான காரணமுமல்ல. அரசியல் மூலோபாயத்திலும் பாரிய கோளாறு உள்ளதையே இது காட்டுகின்றது.

## அழிக்கப்படும் உட்கட்டமைப்பும் வறுமையை எதிர்நோக்கியுள்ள மக்களும்

அறபு நாடுகளின் கூட்டணி நடாத்திவரும் தாக்குதல்களின் விளைவு என்ன என்ற கேள்வியை கேட்டுப் பார்த்தால் இந்த உண்மை புலனாகும். யெமனில் அடுத்த சில மாதங்களுக்குள் பாரிய பஞ்சமும், வறுமையும் ஏற்படும் என்று ஐ.நா அகதிகள் முகவர் நிறுவனம் எச்சரித்துள்ளது. கூர்மையடைந்துள்ள மனிதாபிமான நெருக்கடியின் இறுதி விளைவாக அதுவே இருக்கப் போகின்றது.

யெமன் ஒரு வறிய நாடு. நடுத்தர வருமானம் பெறும் அந்த நாட்டின் தலாவீத வருமானம் 2500 அமெரிக்க டொலர்களாகும். இது சவூதி அறேபியாவில் 25,000 அமெரிக்க டொலர்கள் என்பது கவனத்திற்குரியது. எதிர்வரும் சில ஆண்டுகளில் அந்நாட்டின் எண்ணெய் வளம் முற்றாகத் தீர்ந்து போகும் என எதிர்வு கூறப்படுகின்றது.



சுமார் 40 ஆண்டுகள் யெமன் ஜனாதிபதியாக விளங்கிய இராணுவத் தளபதி அலி அப்துல்லாஹ் ஸாலிஹ்

நாட்டின் மொத்த ஊழியர் தொகையில் 40 வீதமானோர் வேலையற்றவர்கள். வறுமை, போஷாக்கின்மை போன்றவற்றால் ஏற்கனவே அவதியுறும் யெமனியர்கள் சவூதி, குவைத் போன்ற நாடுகளில் பணியாற்றி வருகின்றனர். மக்கள் தொகையில் 50 வீதத்திற்கும் அதிமானோர் கோத்திர அமைப்போடு இணைக்கப்பட்டுள்ளனர்.

யெமன் மக்கள் தொகையில் அரைவாசிப் பேர் தமது அடுத்த நேர உணவு எங்கியிருந்து வரும் என்பதையே அறியாத நிலையில் உள்ளனர் என்று சர்வதேச மீட்புக் குழு கடந்த ஆண்டின் தொடக்கத்திலேயே தெரிவித்திருந்தது. நாட்டிலுள்ள 22 மாகாணங்களில் 18 மாகாணங்களைச் சேர்ந்த மக்கள் போரின் நேரடித் தாக்கங்களை எதிர்கொண்டுள்ளனர். பிராந்தியத்தின் அதிகார சக்திகளுக்கிடையிலான மோதலில் போகும் வழி தெரியாமல் சிக்கித் தவிக்கின்றனர்.

நாட்டிலுள்ள மக்கள் தொகையில் 16 மில்லியன் பேர் பாரிய மனிதாபிமான நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளனர். இது மக்கள் தொகையில் 61 வீதமாகும். அன்றாட உணவு, சுத்தமான குடிநீர், மருத்துவம், பிள்ளைகளின் பாடசாலைக் கல்வி என எல்லாமே கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளன. பல்லாயிரக்கணக்கானோர் அகதியாக்கப்பட்டுள்ளனர். போஷாக்கின்மையால் அவதியுறும் பிள்ளைகளின் எண்ணிக்கை பல மடங்கு அதிகரித்துள்ளது.

மார்ச் 19 இல் ஆரம்பிக்கப்பட்ட தாக்குதலில் இதுவரை 2000 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர். வான் தாக்குதல்களினால் வைத்தியசாலைகளும்

**"யெமன் மீதான அறபு நாடுகளின் போர் அல்லது ஹூத்திகளுக்கு எதிரான வான் தாக்குதல் ஒரு Slow Distination War ஆகும். அதாவது, இத்தாக்கு தல்கள் அவசரமாக முடிவுக்கு வரப் போவதில்லை. ஆனால், அவை நீடித்தால் யெமனின் எதிர்காலம் மிகுந்த ஆபத்தில் முடிவடையும். நீடித்த தாக்குதல் யெமனில் நீடித்த சிவில் யுத்தத்தையும் சிவில் சமூக அழிவையுமே உருவாக்கும். காரணம், அறபு நாடுகளில் எங்கு ஆயுத ரீதியான மோதல் துவங்குகின்றதோ, காலப் போக்கில் அங்கு அல் காயிதா, ISIS போன்ற பயங் கரவாதத்துடன் தொடர்பான குழுக்கள் ஊடுருவுகின்றன. இத்தகைய ஆயுத இயக்கங்களின் ஊடுருவலுக்குப் பின்னர் குறிப்பிட்ட நாடுகளை மோதலற்ற அமைதியான நாடுகளாக எதிர்பார்ப்பது மிகவும் கடினமாகும்.**

**ஆய்வாளர் ஜமால் காஸிம்**

யெமன் அரசியல் நிபுணர். ஜோர்ஜ் வொஷிங்டன் பல்கலைக்கழகம்

பாதிக்கப்படுவதனால் நோயாளர்களை, காயமடைந்தவர் களை பராமரிப்பது நிச்சயமற்றதாகியுள்ளது. சில மாகாணங் களில் போதுமான அளவு மருந்துகள் இல்லை என முறை யீடுகள் செய்யப்படுகின்றது. அரச கட்டிடங்கள், பாடசாலை கள், விவசாய நிலங்கள், மின் உற்பத்தி நிலையங்கள் போன்றனவும் பெருமளவு அழிவை எதிர்கொண்டுள்ளன. சில இடங்களில் மின்சார வசதி முற்றாகத் துண்டிக்கப் பட்டுள்ளது.

இத்தகைய பாரிய சமூக, பொருளாதார இடைவெளிகளால் நிலைகுலைந்து போயிருக்கும் ஒரு நாட்டின் மீது இப்போது ஒரு முழு அளவிலான யுத்தம் திணிக்கப்பட்டுள்ளது. யெமனி யர்களின் எதிர்காலத்திற்கே யுத்தம் என்று பொதுவான நியா யம் சொல்லப்பட்டாலும், போர் அவர்களின் இருப்பையும் பொருளாதாரத்தையும் அணுவணுவாக அழித்து வருகின்றது. எதிர்வரும் காலங்களில் நாடு பாரிய பட்டினிச் சாவுகளுக்கு முகம் கொடுக்கும் என்பது இலகுவில் புறந்தள்ள முடியாத உண்மையாகும்.

போரில் ஈடுபடும் எந்தத் தரப்பும் உடனடி யுத்த நிறுத்தத் திற்கு உடன்படுவதில்லை. இது உலக வரலாறு தரும் பாடம். போரின் விளைவுகள் பற்றிய பிரக்ஞையும் அவர்களிடம் இருப்பதில்லை. போர் தொடங்கிவிட்டது; இனி எதிரிகளை அழிப்பதே ஒரே இலக்கு; இடையில் சிக்கியுள்ள பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள், நோயாளர்கள், உடல் ஊன முற்றோர், வறியோர் என பொதுமக்கள் குறித்து போருக்கு எந்தக் கவலையும் இல்லை.

சிவில் யுத்தம் பற்றிய இந்தப் பொது உண்மைதான் இன்று யெமன் களத்தில் அரங்கேறியுள்ளது. நாட்டின் கீழ்க்கட்ட மைப்பு பெருமளவு அழிக்கப்படுகின்றது. வீடுகள் தரைமட்ட மாக்கப்படுகின்றன. மரணம் மக்களை காத்திருந்து கொல்கின் றது. உள ரீதியான பாதிப்பும் வேறு. அச்சத்தோடும் பதட்டத் தோடும் காலம் கடத்த வேண்டிய நிலை மக்களுக்கு, இந்த எல்லா காட்சிகளும் இன்று யெமனில் அரங்கேறுகின்றமை மிகவும் அவலமானது.

## முரண்பட்ட ஆயுதக்குழுக்களின் ஊடுருவலும் மனித அழிவும்

யெமன் இராணுவ நடவடிக்கை நீடித்தால் அக்களத்தை ஐ.சிஸ் பயங்கரவாதிகள் மற்றும் அல்கைதா தீவிரவாதிகள் பயன்படுத்திக் கொள்வார்கள் என்பது ஏற்கனவே எதிர்பார்க்கப் பட்டதே. இப்போது அது யதார்த்தமாகிவிட்டது. ஆகாய வழி யில் குண்டு மழை பொழியப்படும் அதேவேளை, தரையில் ஹூதி கிளர்ச்சியாளர்கள் முன்னாள் ஜனாதிபதி அலி அப்துல்லாஹ் சாலிஹின் விசுவாசப் படை, தற்போது நாடு கடந்து வாழும் ஜனாதிபதி அப்துர் றப் மன்சூரின் அரசாங்கப் படை, அரச படையில் தனித்துச் செயற்படும் ஜெனரல் குஷைபியின் படை அணி, அறபு தீப கற்ப அல்கைதா, ஐ.சிஸ் பயங்கரவாதிகள் என்று வகை தொகையற்ற ஆயுதக் குழுக் கள் முரண்பட்ட இலக்குகளோடு யெமன் களத்திற்கு வந் துள்ளன. இவற்றின் மோதல்களும் முரண்பாடுகளும் யெம னியர்களுக்கு சார்பாக அல்லது நலன் பயப்பதாக இருக்கப்

போவதில்லை தாம் பின்பற்றும் கருத்தியல்களின் அடிப்படையில் அவற்றின் இலக்குகள் மாறுபட்டுள்ளன. இராணுவ வெற்றியைக் குவிப்பதில் ஒவ்வொன்றும் முனைப்புடன் செயற்படுகின்றன.

யெமன் இராணுவக் களத்தையும் அரசியல் சூழமைவையும் பாரிய நெருக்கடிக்குள் தள்ளுவதற்கே ஐ.சிஸ் பயங்கரவாதிகளின் ஊடுருவல் வழியமைக்கப் போகின்றது. அதற்கான ஆரம்ப சமிக்ஞைகள் வெளிப்படத் தொடங்கியுள்ளன. உலகளாவிய சிக்கலை உருவாக்கும் நோக்கில் சியோனிஸ அமெரிக்க முகவர்களால் களம் இறக்கப்பட்டுள்ள இத்தீவிரவாத இயக்கத் தை எதிர்கொள்ளல் ஒரு பெரும் சவாலாகும்.

அறபு நாடுகளின் கூட்டமைப்பு இதற்குமேல் ஹூதி கிளர்ச்சியாளர்களை மட்டுமன்றி அல்கைதா மற்றும் ஐ.சிஸ் தீவிரவாதிகளையும் இலக்காக கொள்ளல் வேண்டும். வான்வழித் தாக்குதல்கள் மூலம் ஏற்கனவே ஷீஆ கிளர்ச்சியாளர்களையே வெற்றிகொள்ள முடியாமல் தடுமாறும் கூட்டணி, வளர்ந்து வரும் இத்தகைய ஆயுதக் குழுக்களை எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றது என்பது பாரிய சவாலாகும். இன்றைய கள நிலவரங்களை உன்னிப்பாக அவதானித்தால் சுமாராக சிரியாவின் இராணுவ அரசியல் சூழமைவை யெமன் கள நிலவரமும் ஒத்திருப்பதைக் காணலாம்.

### ஜெனரல் குஷைபியின் எதிர் விசுவாசம்

யெமனில் ஹூதிகள் வேகமாக முன்னேறியமைக்கும் தலைநகரைக் கைபற்றியமைக்கும் முன்னாள் ஜனாதிபதி அலி அப்துல்லாஹ் ஸாலிஹின் விசுவாச படையினரின் ஆதரவு முக்கிய காரணமாகும். தனது ஆட்சியின் போது ஒரு தசாப்தத்திற்கு மேலாக ஹூதிகளை எதிர்த்துப் போராடிய அப்துல்லாஹ் ஸாலிஹ் மக்கள் புரட்சி மூலம் பதவி கவிழ்க்கப்பட்ட பின்னர், ஹூதிகளுக்கு ஆதரவளிக்கத் தொடங்கினார். யெமன் அரச படையில் அவருக்கு விசுவாசமாக இருந்த ஒரு படைப்பிரிவு தற்போது ஹூதிகளுக்கு ஆதரவளித்து வருகின்றது. ஈரான் ஆதரவோடு யெமனைக் கைப்பற்றியுள்ள ஹூதிகளை தோற்கடிப்பதில் அலி அப்துல்லாஹ் ஸாலிஹும் ஒரு பெரும் சவாலாகும்.

அவருக்கு விசுவாசமான படை ஹூதிகளுக்கு ஆதரவளித்து வருவதனால், தற்போதைய யெமன் அரச படையினர் ஹூதிகளை தோற்கடிப்பதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை ஈட்ட முடியாமல் உள்ளது. யெமனின் முக்கிய மாகாணங்களில் ஒன்றான அம்ரானை கடந்த வாரம் ஹூதிகள் கைப்பற்றியினர்.

ஹூதிகளின் படை முன்னேற்றத்தைத் தடுத்து



யெமன் அரச படையைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் குஷைபி, அம்ரான் மாநிலத்தை ஹூதிஷ்களிடம் இழந்தமைக்காக குற்றம் சுமத்தப்படுகின்றவர்.

நிறுத்துவதற்கு அனுப்பபட்ட அரச படையினர் எதிர்ப்பை சமாளிக்க முடியாமல் பின்வாங்க நேர்ந்தது. தாக்குதல் அனுபவமும் தந்திரோபாய அணுகுமுறையும் நிறைந்த மேஜர் ஜெனரல் குஷைபியின் தலைமையில் இப்படையணி களமிறங்கியது. ஆனால், தாக்குதல் ஆரம்பித்து சில மணித்தியாலங்களுக்குள்ளேயே குஷைபியின் படை பின்வாங்க நேர்ந்தது.

தம்மால் முடியுமானவரை எதிர்த்துப் போராடியதாகவும் எனினும், ஹூதிகளை முன்னேறாமல் தடுத்து நிறுத்த முடியவில்லை எனறும் குஷைபி ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார். ஆனால் குஷைபியின் நகர்வு குறித்து யெமனிய இராணுவ வட்டாரங்களில் பாரிய சந்தேகங்கள் எழுந்துள்ளன. குஷைபியின் படையணி ஹூதிகளுக்கு ஆதரவளிப்பதாக அரசியல் அவதானிகளும், இராணுவ பகுப்பாய்வாளர்களும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இந்தப் புதிய மாற்றம் யெமனின் அரச படை எதிர்வு கொள்ளும் பெருத்த சவாலாகும். ஹூதிகளை தோற்கடிப்பதற்கான ஒன்றுபட்ட போராட்டம் யெமனில் நாளாந்தம் சிதைந்து வருவதையே இது காட்டுகின்றது.

### ஜெனிவா பேச்சுவார்த்தை

ஐ.நா ஆதரவோடு ஜெனிவாவில் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைக்கு ஹூதிகளை பங்கு கொள்ளச் செய்வதில் பெரும் சிக்கல் நிலை

ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. யெமனில் நடைபெற்று வரும் போரை முடிவிற்கு கொண்டு வரும் நோக்கில் நடைபெற்றுவரும் ஜெனீவா பேச்சுவார்த்தையின் விளைவுகள் நிச்சயமற்ற தாகவே உள்ளன.

ஹூதிகளை வழிப்படுத்தி பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டு வந்தாலும், சம்பந்தபட்ட தரப்பினர் அனைவரையும் திருப்திப்படுத்தக் கூடிய முடிவுகளை எட்டலாமா என்பது சந்தேகத் துக்குரியது. இப்பேச்சுவார்த்தைக்கு அப்துர் றப் மன்சூரின் அரசாங்க தரப்பு பிரதிநிதிகளோடு மக்கள் புரட்சியில் ஈடுபட்டோரை உள்ளடக்கிய தனியான பிரதிநிதிகளின் குழுவொன்றும் கலந்து கொள்வதை ஹூதிகள் ஆட்சேபிக்கின்றனர்.

யெமன் மக்களில் *80* வீதமானவர்கள் தற் போதைய போரினால் பாதிக்கப்பட்டுள்ளமையால் நிரந்தரமான போர் நிறுத்தம் கைச்சாத்திடப்பட வேண்டும் என அந்நாட்டில் இயங்கும் *13* நிவாரண அமைப்புகளின் கூட்டமைப்பு வலி யுறுத்தி வருகின்றது. யெமனின் தெற்கு நகரமான தாயிசிக்கு நிவாரண உதவிகள் சென்று சேர்வதை ஹூதி கிளர்ச்சியாளர்கள் தடுத்து வருகின்றனர்.

அதேவேளை கடல் வழியாகவும், வான் வழி யாகவும் நிவாரண உதவிகள் செல்வதற்கு சவூதி கூட்டமைப்பு விதித்துள்ள தடைகள் நீக்கப்பட வேண்டும் எனவும் நிவாரண உதவி அமைப்புக்கள் கோரி வருகின்றன. ஏற்கனவே இக்கோரிக்கைக்கு செவி சாய்க்கப்பட்டபோது ஐந்து நாட்கள் மாத்திரமே கடந்த மூன்று மாதங்களில் போர் நிறுத்தப்பட்டது. பாதிக்கப்பட்ட மக்களின் நிவா ரண உதவித் தேவைகளை வழங்குவதற்கு இக் காலம் போதியதாய் இல்லை. அதனால் களத்தில் மனிதாபிமான நெருக்கடிகள் தீவிரமடைந்து வருகின்றன என நிவாரண அமைப்புக்கள் சுட்டிக் காட்டுகின்றன.

ஸாலிஹின் குடியிருப்பு மற்றும் அதனை சூழ வுள்ள இடங்களில் நடாத்தப்பட்ட தாக்குதலில் நூற்றுக்கணக்கான பொது மக்கள் கொள்ளப்பட் டுள்ளதாக ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

### உள ரீதியான பாதிப்புக்கு உட்படும் குழந்தைகள்

தற்போது யெமனில் நடைபெற்று வரும் ஆயுத மோதல்களால் முன்னொருபோதும் இல்லாத வகையில் குழந்தைகள் உளக் காயங்களுக்கு உட் பட்டுள்ளதாக மருத்துவ அறிக்கைகள் வெளிப் படுத்தியுள்ளன. போரில் *279* குழந்தைகள் கொல் லப்பட்டுள்ளதோடு, *402* பேர் காயமடைந்துள்ள னர். *500* இற்கும் அதிகமான குழந்தைகள் உள



## யெமன் குடியரசு

தேசிய சுலோகம்: அல்லாஹ், தாய்நாடு, புரட்சி, ஐக்கியம்

தலைநகர்: சன்ஆ

உத்தியோகபூர்வ மொழி அறபு

பெரும்பான்மை மக்கள் முஸ்லிம்கள்

ஜனாதிபதி: அப்துர் ரப் மன்சூர் ஹாதி (தற்போது சவூதி அறேபியாவில் தஞ்சம் கோரியுள்ளார்.)

ஹூதி கிளர்ச்சியாளர்களின் தலைவர்: முஹம்மத் அலி அல் ஹூதி

யெமன் உருவாக்கம்: வடயெமன் சுதந்திரம் (1918 நவம்பர் 01)

தென் யெமன் (1967 நவம்பர் 30)

ஐக்கிய யெமன் (1990 மே 22)

பரப்பு: 527,829 சதுர கி.மீ. (50 ஆவது நாடு)

சனத்தொகை: 23,833,000 (2011) 48 ஆவது நாடு

மொத்த உள்நாட்டு உற்பத்தி: 58.2$ (பில்லியன்)


தலாவீத வருமானம்: 2249 US$

நாணயம் யெமன் ரியால்

எல்லைகள் வடக்கு சவூதி அறேபியா, மேற்கில் செங்கடல் மற்றும் ஏடன் வளைகுடா, தெற்கில் அறேபியக் கடல், கிழக்கில் ஓமான்.

2015 பெப்ரவரி முதல் தலைநகர் சன்ஆன் ஹூதி கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் இருந்து வருகின்றது.





ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளதாக மருத்துவ அறிக்கைகள் உறுதி செய்கின்றன. அதில் கணிசமானோர் மீட்ட முடியாதவாறு நிரந்தர மன வடுவுக்கு ஆளாகியுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

Save th Children அமைப்பின் யெமன் பிரதிநிதி பாத்திமா அல் ஹாஜில், யெமன் குழந்தைகள் பாதுகாப்பின்மையை உணர்கின்றனர். குண்டுகளின் மிதமான சத்தத்தினால் உள அதிர்வுக்கு உட்படுகின்றனர். பெற்றோரும் அச்சமடைவதனால் பிள்ளைகள் அதனால் பாதிக்கப்படுகின்றனர்.

யெமனில் பணியாற்றும் யுனிசெப் நிறுவனத்தின் பிரதிநிதி Dr. ஸலாமா உடல் ரீதியில் சிறுவர்கள் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து கவலை வெளியிட்டுள்ளார். சில இடங்களில் தற்காலிக முகாம்களில் தஞ்சம் கோரியுள்ள குடும்பங்களின் பிள்ளைகள் போஷாக்கின்மையால் பாதிப்படைந்துள்ளதோடு, வன்முறைக் காட்சிகள் அவர்களது உள்ளங்களில் எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றது எனத் தெரிவித்துள்ளார்.

யெமனின் நிலமை மிகவும் ஆபத்தானதாகும். 1.2 மில்லியன் சிறுவர்கள் அதிலும் 5 வயதுக்கு குறைவான சிறுவர்கள் எதிர்வரும் 12 மாதங்களில் போஷாக்கின்மையால் பாதிக்கப்படுவர் என அவர் எச்சரிக்கின்றார்.

**முடிவாக...**

சமகால இஸ்லாமிய உலகில் ஆயுதப் போர்களும் வன்முறைகளும் இடம்பெறும் நாடுகளின் நீண்ட பட்டியலில் யெமனும் இணைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே ஈராக், சிரியா, லெபனான், லிபியா, ஆப்கானிஸ்தான், சோமாலியா, எதியோப்பியா போன்ற நாடுகளின் வரிசையில் யெமனும் சேர்ந்துள்ளது. போரினால் ஏற்படும் வடுக்களும் காயங்களும் வலிமையானவை. கட்டடங்கள், மனித உயிர்கள், இயற்கை வளங்கள், பொருளாதார மூலங்கள், பொது மக்கள் உளவியல் என அனைத்தையும் காவு கொள்ளும் போரின் எதிர் விளைவுகளை யெமனியர்கள் பரந்துபட்ட வகையில் அனுபவித்து வருகின்றனர்.

மோதலில் ஈடுபட்டுள்ள தரப்புக்கள் பொது மக்களின் அவலங்களைக் கருத்திற் கொண்டதாகத் தெரியவில்லை. பிற அறபு நாடுகள் போன்று யெமனின் ஆயுதக் களம் மிகச் சிக்கலானதாக மாற்றப்பட்டு வருகின்றது. நீடித்த ஓர் சிவில் யுத்தத்தை முடுக்கி விடுவதற்கான களமே அங்கு தயார் செய்யப்படுவதாகத் தோன்றுகின்றது.

பிராந்தியத்தின் அரசியல் பங்காளர்களும் ஆதிக்க சக்திகளும் அமைதி அடிப்படையில் தீர்வு காண வேண்டிய பிரச்சினையாகவே யெமன் நெருக்கடி மாறியுள்ளது. ஆயுத ரீதியான மோதலே தீர்வு என செயற்பட முனைந்தால் யெமனின் எதிர்காலம் முற்றிலும் சூனியமாகிவிடும் என்ற உண்மையை சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது.

# குவைத் குண்டு வெடிப்பும் ஐசிஸ் இன் வியாபகமும்

சமீபத்தில் குவைத்திலும் தூனிசியாவிலும் இடம்பெற்ற இரு வேறு தாக்குதலில் குறைந்தது 60 பேர் வரை கொல்லப்பட்டும் நூற்றுக்கணக்கானோர் காயப்பட்டும் உள்ளதாக அறிவிக்கப்படும் சம்பவங்கள் சமகால இஸ்லாமிய உலகில் பாரிய அதிர்வலையை உருவாக்கியுள்ளது.


மத்திய கிழக்கில் ஷீஆ-சுன்னிகள் கலந்து வாழும் நாடுகளில் இதுவரை எரிந்து வந்த மோதல்கள் ஆயுத ரீதியாக பரிமாணம் கொள்வது மிக ஆபத்தான குறிகாட்டியென்று எச்சரிக்கப்படுகின்றது. குவைத்தில் ஷீஆக்களின் பள்ளிவாயல் யொன்றில் தற்கொலைக் குண்டுதாரி நடத்திய தாக்குதலில் 24 பேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஷவாபறில் உள்ள இமாம் ஸாதிக் பள்ளியிலேயே இத்தாக்குதல் நடைபெற்றுள்ளது. தாக்குதலை நடாத்தியவர் சவூதி அறேபியாவை சேர்ந்தவர் என குவைத் வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

பாஹித் சுலைமான் அப்துல் முஹ்ஸின் அல் ஜப்பா எனும் பெயருடைய சவூதி அறேபிய பிரஜை கடந்த 26.06.2015 இல் விமானம் மூலம் குவைத்தின் தலைநகருக்கு வருகை தந்துள்ளார். குவைத் சர்வதேச விமான நிலையத்தினூடாகவே குவைத்துக்குள் ஊடுருவிய அவர், ஷீஆக்கள் தொழுகையில் ஈடுபட்டிருந்தபோது, தாக்குதலை நடாத்தியுள்ளார்.

1992 இல் சவூதி அறேபியாவில் பிறந்த பாஹித் சுலைமான் அப்துல் முஹ்ஸின் ஏற்கனவே பயங்கரவாதத்தோடு தொடர்புபட்டவர் அல்ல என்று சவூதி உள்விவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. குறிப்பிட்ட நபர் 25 ஆம் திகதி றியாத்திலிருந்து பஹ்ரைன் தலை நகர் மனாமாவிற்கு சென்று அங்கிருந்தே குவைத்துக்கு வருகை தந்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ளது.

விசாரணைகளை மேற்கொண்டு வந்த குவைத் பொலிஸார், தற்கொலை குண்டுதாரி தங்கியிருந்து வீட்டின் உரிமையாளரை கைதுசெய்துள்ளது. அதேபோன்று குண்டுதாரியை எடுத்துச் சென்ற சாரதியும் கைதுசெய்யப்பட்டுள்ளார். குவைத்தின் அரச செய்திச் சேவை இத் தகவலை வெளியிட்டுள்ளது. கடந்த மாதம் சவூதி அறேபியாவில் இது போன்ற தாக்குதல் ஷீஆக்களின் பள்ளியை இலக்கு வைத்து நடாத்தப்பட்டமை கவனத்திற்குரியது. இக்குண்டுத் தாக்குதலோடு தொடர்புடைய சந்தேச நபர்களை தேடும் பணியில் தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளதாக குவைத் பொலிஸார் கூறுகின்றனர். வெள்ளிக்கிழமை தாக்குதலில் கொல்லப்பட்



டோரின் ஜனாஸா ஊர்வலத்தில் ஷீஆக்கள், சுன்னிகள் ஆயிரக்கணக்கில் கலந்துகொண்டனர்.

குவைத்தின் பாதுகாப்பு முன்னொருபோதும் இல்லாதவாறு பலப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக எல்லைப்புற இராணுவம் பன்மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளதோடு இராணுவ ரீதியான எச்சரிக்கைகளும் விடுக்கப்பட்டுள்ளன. கடந்த 10 ஆண்டு கால இடைவெளியில் குவைத்தில் நடைபெற்ற மிகப்பெரிய குண்டுத் தாக்குதல் இது எனக் கருதப்படுவதனால் சிவிலியன்களிடையே தாக்குதல் குறித்த அச்சம் மேலெழுந்துள்ளது.

இத்தாக்குதலுக்கான பின்னணிக் காரணம் என்ன? இதனைச் மேற்கொண்டோர் யார்? சவூதி பிரஜைக்கும் குவைத் தாக்குதலுக்குமிடையிலான உறவு என்ன? இத்தாக்குதலுக்கு உத்தியோகபூர்வமாக உரிமைகோரியுள்ள ஐசிஸ் தீவிரவாதிகள் எதனை இலக்கு வைக்கின்றனர்? இது போன்ற தாக்குதல்கள் பிராந்தியத்தில் ஷீஆ-சுன்னி உறவில் ஏற்படுத்தப் போகும் அதிர்வுகள் என்ன? குறிப்பாக ஈரான்- சவூதி அறேபிய முறுகலில் இது எவ்வகையான தாக்கத்தை ஏற்படுத்தப் போகின்றது என்பதெல்லாம் ஆழமாக ஆராயப்பட வேண்டிய கேள்விகளாகும்.

அரசியல் ஸ்திரப்பாடும் பொருளாதார செழிப்பும் கொண்ட மிகச் சிறிய சனத் தொகை கொண்ட குவைத்தில் ஷஆக்களின் பள்ளியின் மீது நடத்தப்பட்ட முதல் தாக்குதல் என்ற வகையில் இதன் தாக்கம் அரசியல் ரீதியில் மிகவும் முக்கியமானதாக கொள்ளப்படுகின்றது. இரண்டாவது தற்கொலை குண்டுதாரி சவூதி அறேபியாவைச் சேர்ந்தவர் என்பது பிராந்தியத்தின் பதற்ற நிலையை அதிகரிப்பதற்கு மேலும் காரணமாகலாம் என்ற அச்சத்தை உருவாக்கியுள்ளது.

மூன்றாவது இத்தாக்குதலுக்கு ஐசிஸ் பயங்கரவாதிகள் உரிமை கோரியிருப்பது பிராந்தியத்தில் அவர்களின் வியாபகத்தை பிரதிபலிக்கின்றது. அவ்வாறாயின் மத்திய கிழக்கில் ஐசிஸ் தீவிரவாதிகளின் ஊடுருவல் நீண்ட காலத்தில் ஏற்படுத்தப் போகும் அரசியல் இராணுவ விளைவுகள் எப்படி இருக்கப் போகின்றது என்பது ஆழமான ஆய்வுக்குரியதாகும்.

குவைத் அமைச்சரவை ஏற்பாடு செய்த அதிரடியான கூட்டத்தில் இச்சம்பவத்தை கறுப்புப் பயங்கரவாதம் என்று வர்ணித்துள்ளதோடு, அதனை எதிர்கொள்ள நாட்டின் பாதுகாப்பு படையை பலப்படுத்த வேண்டும் என்று தீர்மானம் எடுத்துள்ளது. அதன்படி அதிரடியான இராணுவ குவிப்பு குவைத் நகரில் இடம்பெற்று வருகின்றது.

பயங்கரவாதத்தை பூண்டோடு ஒழிப்பதற்கு குவைத் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்று அந்த அமைச்சரவை கூட்டத்தில் முடிவாகியுள்ளது. அதேவேளை இப்பயங்கரவாதிகளை எதிர்த்துப் போராடுவதற்கு களைப்பற்ற நடவடிக்கைகள் தொடரும் எனவும் பிரகடனம் செய்துள்ளது.

குவைத் அமீர் ஸபா அல் அஹ்மத் அஸ் ஸபா தாக்குதலுக்கு இலக்கான பள்ளியை சென்று



பார்வையிட்டதோடு றமழான் மாதத்தில் இது போன்ற சம்பவம் நடைபெற்றமை குறித்து தனது ஆழ்ந்த கவலையையும் வெளியிட்டுள்ளார். குறிப் பிட்டுள்ள பள்ளிவாயல் நாட்டின் உள்விவகார அமைச்சின் கட்டிடத்திலிருந்து மிகச் சமீபமாகவே அமைந்துள்ளது.

இத்தாக்குதல் பயங்கரவாதத்தின் தெளிவான முகம் என்றும் புனித றமழானில் மேற்கொள்ளப் பட்டுள்ளமை முஸ்லிம்களின் புனிதத்துவத்தை மீறும் செயல் என்றும் அப்பாவிகளின் இரத்தத்தை ஓட்டுவது ஹராம் எனவும் குவைத் அமீர் கருத்து வெளியிட்டுள்ளார். நாட்டின் பாதுகாப்பிற்கு தேசிய ஐக்கியமே பாதுகாப்புச் சுவர் எனவும் ஸபா வர்ணித்துள்ளார். மே மாதம் வெள்ளிக் கிழமைகளில் இரண்டு முறை சவூதி அறேபிய ஷீஆ பள்ளிவாயல்களை ஐசிஸ் தீவிரவாதிகள் இலக்கு வைத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.


குவைத் அரசாங்கம் உடனடியாக செயல்படு கின்றமைக்கும், பாதுகாப்பை பலப்படுத்துகின்ற மைக்கும் அரசியல் பொருளாதார காரணங்களும் இருக்கின்றன. குவைத் தலைநகரில் மிகப்பெரும் செல்வந்தவர்களாக இருப்பவர்கள் ஷீஆக்கள். அந்நாட்டின் வணிகத் துறையில் செல்வாக்குள்ள புள்ளிகள் அவர்களே, அவர்களுடனான முரண் பாடு தேசிய பாதுகாப்பிற்கு மட்டுமன்றி வணி கத்துறைக்கும் சவாலாக அமையும் என்று அரசாங் கம் நம்புகின்றது.

அதேபோன்று ஆட்சியிலுள்ள ஸபா குடும்பம் இத்தகைய உள்நாட்டு மதக் கலவரங்களாலும் ஷீஆ-சுன்னி மோதல்களாலும் ஆட்டங் காணக் கூடிய ஆபத்து உள்ளது. ஏற்கனவே ஸபா குடும் பத்தின் மன்னர் ஆட்சி குறித்து பாரிய அளவிலான அதிருப்தி அலைகள் அந்நாட்டின் நிலவுகின்றன. சகோதரத்துவ அமைப்பினரின் அரசியல் செல் வாக்கு வேகமாக அதிகரித்து வருகின்றது.

பிற அறபு நாடுகள் போன்று சிவில் சமூகத்தின் எழுச்சி அந்நாட்டில் உருவாவதற்கான வாய்ப்பு இருக்கின்றது. அத்தகைய மக்கள் எழுச்சி நடை பெறாமல் தடுப்பதில் அரசாங்கம் மிகக் கவனமாக இருக்கின்றது. குறிப்பாக சகோதரத்துவ அமைப் பினரின் செல்வாக்கை மிகப்பெரும் பிரச்சினை யாகக் கருதும் அரசாங்கம், அவ்வியக்கத்தை தன் எதிரியாகவே எண்ணுகின்றது.

குவைத்தில் நடைபெற்றுள்ள தற்கொலை குண்டுதாக்குதலின் பதற்ற சூழலைப் பயன்படுத்தி அமைதி வழியில் பயணிக்கும் ஜனநாயக நிறுவன மான சகோதரத்துவ அமைப்பை குவைத்தில் தடைசெய்வதற்கு அரசாங்கம் சில முயற்சிகளை முடுக்கி விட்டுள்ளது. ஏற்கனவே அரசாங்கத் தோடு சமரசமான முறையில் இணைந்து செயற் படும் சகோதரத்துவ அமைப்பின் பிரதிநிதிகள் அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு சகோதரத்துவ அமைப்புக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டு விடக் கூடாது என்று கவனமாக இருந்து வந்தனர்.

தற்போதைய அரசாங்கம் நிலவும் சூழ்நிலை யைப் பயன்படுத்தி சகோதரத்துவ இயக்கத்தினர் குவைத்தின் எதிரிகள் என்று அறிவித்துள்ளமை ஆரோக்கியமான அறிகுறியல்ல. ஆக ஐசிஸ் தீவிர வாதிகளின் குவைத் குண்டுத்தாக்குதல் அமைதி யான இஸ்லாமிய தஃவாவிற்கும் பாரிய சவாலாகி யுள்ளது.



கடந்த 40 ஆண்டுகளாக பிராந்தியத்தில் ஈரானுக்கும் சவூதி அறேபியாவுக்கும் இடையில் புகைந்து வந்த ராஜதந்திர அரசியல் மற்றும் கொள்கை முரண்பாடுகள் யெமனில் இராணுவ களத்திற்கு வரும் அளவிற்கு கூர்மை அடைந்துள்ளது. இந்த இக்கட்டான தருணத்திலேயே குவைத்தில் தாக்குதல் நடாத்தியவர் சவூதி அரேபிய பிரஜை என்பது அரசியல் முக்கியம் பெறுகின்றது.

ஈரான்-சவூதி முரண்பாட்டை மென்மேலும் கூர்மைப்படுத்துவதற்கு இச்சம்பவத்தை ஈரான் பயன்படுத்திக் கொள்ளலாம். யெமனில் ஹூதி கிளர்ச்சியாளர்களுக்கெதிராக ஆகாய வழித் தாக்குதலை நடாத்தி வரும் கூட்டணிக்கு சவூதி அறேபியாவே தலைமை வகிக்கின்றது.

கடந்த செப்டம்பரில் சன்ஆவைக் கைப்பற்றிய ஹூதிகளுக்கெதிராக வளைகுடா ஒப்பந்த நாடுகளின் கூட்டமைப்பு இராணுவ நடவடிக்கையில் இறங்கியமை ஷீஆ-சுன்னி ஆயுத மோதலின் உத்தியோகபூர்வ தொடக்கம் எனலாம். மோதலின் உடனடி நோக்கம் எதுவாக இருப்பினும் நீண்ட காலத்தில் முழுப் பிராந்தியத்தையும் அரசியல் குழப்பங்களுக்குள் தள்ளும் உள்நோக்கம் இதற்குப் பின்னணியிலுள்ள அமெரிக்க, சியோனிஸ சக்திகளுக்குள்ளது.

இந்த அமெரிக்க, சியோனிஸ சக்திகளால் திரைக்குப் பின்னாலிருந்து இயக்கப்படும் ஐ.சிஸ் பயங்கரவாத அமைப்பே இத்தாக்குதலை நடாத்தியுள்ளமை நாம் வலியுறுத்தும் இந்த அரசியல் யதார்த்தோடு இணைத்து பார்க்கக் கூடியதாகும். மத்திய கிழக்கில் விரிந்தளவிலான ஷீஆ-சுன்னி மோதலை தூண்டுவதற்கு ஐ.சிஸ் அமைப்பு மேற்கு சக்திகளால் பயன்படுத்தப்படுகின்றமைக்கு குவைத் தாக்குதல் சிறந்த உதாரணமாகும். இதற்கு முன்னர் இடம்பெற்ற சவூதி அறேபியாவின் தாக்குதல்களையும் இதனோடு இணைத்துப் பார்க்க வேண்டும்.

ஐசிஸ் பயங்கரவாத அமைப்பு நாளாந்தம் வியாபித்து வருகின்றது. சிரியாவின் ரக்கா பகுதியில் ஆட்சி நடாத்தும் ஐசிஸ் ஈராக்கின் பெருமளவு நிலங்களைக் கட்டுப்படுத்தியுள்ளது. தற்போது ஆப்கானிஸ்தான். யெமன், சூடான், எகிப்து, அல்ஜீரியா, தூனிசியா, சோமாலியா, லிபியா, சினாய் என்று 18 இற்கு மேற்பட்ட நாடுகளில் இவ்வியக்கம் ஊடுருவியுள்ளது. இதனது வேகமான முன்னேற்றத்திற்கும் அதற்கெதிரான இராணுவ நடவடிக்கைகளின் தோல்விகளுக்கும் இடையில் உள்ள தர்க்கம் மிகவும் எதிரிடையானதாகும்.

ஐ.சிஸ் பயங்கரவாதத்தை தோற்கடிக்கும் சர்வதேச கூட்டணி ஒன்று அமெரிக்க தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள அதே கால கட்டத்திலேயே அவ்வியக்கம் 18 நாடுகளை நோக்கி வேகமாக ஊடுருவியுள்ளது என்றால் இதன் அர்த்தம் என்ன? சர்வதேச சமூகத்தை ஏமாற்றி அதன் கண்களில் மண்ணைத் தூவும் வொஷிங்டனும் சியோனிச சக்திகளுமே ஐசிஸ் இயக்கத்தின் பின்னணியில் உள்ளமை இதன் மூலம் தெளிவாகின்றது. இதற்கு சிறந்த உதாரணம் இஸ்ரேலின் எல்லைப் புறமாக உள்ள எகிப்துக்குச் சொந்தமான சினாய் பகுதி இன்று ஐ.சிஸ் இயக்கத்தின் முக்கிய இராணுவ பயிற்சி முகாமாக மாறியுள்ளது.

ஆனால், இஸ்ரேல் தரப்பிலிருந்து இதற்கெதிரான ஒரு கண்டன அறிக்கையேனும் வெளிவரவில்லை. இது குறித்து ஒன்றும் தெரியாதது போன்றே இஸ்ரேல் அமைதி காக்கின்றது. ஐ.சிஸ் தீவிரவாத இயக்கத்தை பாலூட்டி வளர்ப்பதில் சியோனிஸ இஸ்ரேலுக்குள்ள பங்கையே இது எடுத்துக் காட்டுகின்றது.

இவ்வுண்மையை நிறுவும் இன்னுமொரு சம்பவமும் உள்ளது. மத்திய கிழக்கின் சகோதரத்தவ அமைப்பை விட ஒப்பீட்டு ரீதியில் ஐசிஸ் இயக்கம் ஆபத்து குறைந்தது என்று நெட்டன்யாஹு தெரிவித்துள்ளார். அமெரிக்க தேசிய பாதுகாப்பு நிறுவனத்தின் முன்னாள் அதிகாரி ஸ்நோடன் ஐசிஸ் அமைப்பின் தலைவர் அபூபக்கர் பக்தாதி இஸ்ரேலின் மொஸாட் அமைப்பினால் பயிற்றுவிக்கப்பட்டவர் எனக் கூறுவது இங்கு முற்றிலும் உண்மைப்படுகின்றது. அதனால்தான் சினாயில் நிலைபெற்றுள்ள ஐசிஸ் தீவிரவாதிகளை கண்டு கொள்ளாமல் இருக்கின்றது.

ஐசிஸ் ஆப்கான் முதல் தூனீசியா வரையுள்ள 18 நாடுகளில் ஊடுருவியுள்ளமை முழு அறேபிய இஸ்லாமிய உலகையும் இராணுவ குழப்பமொன்றில் தள்ளிவிடுவதே அதன் நோக்கம் என்பதை தெளிவாகக் காட்டுகின்றது.

ஒவ்வொரு நாட்டிலுமுள்ள அரச படையினர் மற்றும் ஏற்கனவே விடுதலைப் போராட்டதில் ஈடுபட்டுள்ள இராணுவ இயக்கங்கள் என்பவற்றோடு மோதும் நிலைக்கு ஐசிஸ் சென்று கொண்டிருக்கின்றது.

எதிர்வரும் ஆண்டுகளில் ஒட்டுமொத்த இஸ்லாமிய உலகையும் தீர்க்கமுடியாத அரசியல் இராணுவப் பொறிக்குள் மாட்டி வைப்பதற்கு ஓர் உலகளாவிய கூட்டுச்சதி அரங்கேறி வருகின்றது. அச்சதிகாரர்களின் கைக்கூலிகளாக ஐசிஸ் கையாளப்படுகின்றமை பெரும் துரதிஷ்டமே முஸ்லிம் உலகு இது குறித்து எவ்வளவு தூரம் விழிப்படைந்துள்ளது என்பது கேள்விக்குறியே.

# உலக அமைதியை அச்சுறுத்தும் அமெரிக்கா

வருடந் தோறும் உலக நாடு களுக்கிடையில் ஆயுத வணிக மும் கொடுக்கல் வாங்கல்களும் எவ்வாறு நடைபெறுகின்றன என்பதைப் புள்ளிவிபரங்களின் அடிப்படையில் தொகுத்து அறி க்கை வெளயிடுவது SIPIRI இன் பிரதான பணியாகும். சுவீ டன் தலைநகர் ஸ்டொக்ஹோமை தலைமையகமாகக் கொண்டு இந்நிறுவனம் இயங்குகின்றது. ஸ்டொக்ஹோம் சர்வதேச சமா தான ஆய்வு நிறுவனம் (Stock horm Internation Peace Research Institute) என்பதே இதன் முழுப் பெயர்.

2014 இல் இந்நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கை மத் திய கிழக்கிலும் முஸ்லிம்களை செறிவாகக் கொண்டுள்ள வட ஆபிரிக்காவிலும் உள்நாட்டுப் போர்கள் மென்மேலும் தீவிர மடையும் என்பதையே எடுத்துக் காட்டுகின்றது. சட்டவிரோதமான அரசாங்கங்கள் தம்மை நீ டிக்கச் செய்வதற்கு ஆயுதக் குழுக்கள், வன்முறைகளை விசாலிப்பதற் கும் பெருந்தொகை ஆயுதங்க ளைப் பயன்படுத்தி வருகின்றன.

GCC என அழைக்கப்படும் அமைப்பிலுள்ள அறபு நாடுகள் தான் கடந்த ஆண்டில் ஆகக் கூடுதலான ஆயுதங்களைக் கொள் வனவு செய்துள்ளன. சவூதி அறேபியா, கட்டார், குவைத், ஓமான், பஹ்ரைன், ஐக்கிய அறபு அமீரகம் ஆகிய நாடுகள் பெருந்தொகை நிதியை ஆயுதக் கொள்வனவுக்காக செலவு செய் துள்ளன. இதில் முன்னணி வகிக் கும் நாடு சவூதி அறேபியா.

1005 முதல் 2009 வரையான காலப் பகுதியை விட 2010-2014 இடைப்பட்ட காலத்தில் அறபு நாடுளின் ஆயுதக் கொள்வனவு 54% ஆல் அதி கரித்துள்ளது. பூகோள ரீதியில் அமெரிக்காவிட மிருந்து ஆகக் கூடுதலான ஆயுதங்களைக் கொள் வனவு செய்யும் இரண்டாவது நாடு சவூதி அறே பியா என இந்த அறிக்கை கூறுகின்றது.

2000களுக்குப் பின்னர் வளை குடாவிலும் தென்மேற்கு ஆசியாவிலும் வட ஆபிரிக்காவிலும் உள்ள முஸ்லிம் நாடுகளில் தோன்றிய ஆயுதக் குழுக்களின் செயல்பாடுகள் விரிவு பெற்று வருவ தால் அவையும் அமெரிக்காவின் ஆயுதங்களை பெருமளவு பயன்படுத்தத் துவங்கியுள்ளன. தற் போது சிரியா, லிபியா, ஈராக், யெமன் என்பவற் றுக்கு மாபியாக்கள் மூலம் அமெரிக்காவிலிருந்து இந்த ஆயுதங்கள் வந்து சேர்கின்றன.

இதேவேளை ஈரான், சவூதி அணிகளுக்கிடை யிலான மோதலைக் கூர்மைப்படுத்துவதன் மூலம் ஆயுத வியாபாரத்தை விஸ்தரிக்கலாம் என அமெ ரிக்கா கருதுவதனால் எதிரும் புதிருமான அணிகள் போட்டியிட்டுக் கொண்டு ஆயுதங்களைக் கொள் வனவு செய்கின்றன.

மன்னராட்சி நிலவும் நாடுகள் மக்கள் ஆணை க்கு எதிராக தமது அதிகார பீடங்களைக் காப்பதற்கு ஆயுதக் களஞ்சியங்களை விரிவுபடுத்தி வருகின் றன. சவூதி, ஐக்கிய அறபு அமீரகம் என்பவை உள்ளூரிலோ பிராந்தியத்திலோ தமது குடும்ப ஆட்சியை கவிழ்க்க நினைக்கும் சக்திகளை எதிர் கொள்ளவே இவ்வளவு தொகை ஆயுதங்களைக் கொள் வனவு செய்து குவித்துள்ளன.



SIPRI இன் சிரேஷ்ட ஆய்வா ளர் Piter Wezeman எதிர்வரும் ஆண்டு களில் மத்திய கிழக்கு நாடுகளுக்கான ஆயுத விநியோகம் தற்போதைய அளவை விட அதிகரிக்கும் என்கிறார். ஏனெனில், ஆயுதக் கொள்வனவில் பூகோள ரீதியில் முதலிடம் வகிக்கும் நாடு இஸ்ரேல். மத்திய கிழக்கிலுள்ள ஒரேயொரு ஜனநாயக நாடு என்று அமெரிக்காவினால் போற்றப்படும் இஸ்ரேலின் முழு மொத்த இருப்பும் ஆயுதக் களஞ்சியசாலையிலேயே தங்கியுள்ளது.


மக்கள் புரட்சியைத் திருடி அதிகார போதையில் திணரும் எகிப்திய இராணுவம் அமெரிக்காவின் ஆயுதங்களையே நம்பியுள்ளது. யெமனில், லெபனானில், ஈராக்கில் ஷீஆ ஆட்சிபீடங்களைப் பலப்படுத்த முயலும் ஈரான் ஆயுதங்களிலேயே தங்கியுள்ளது. போதாக்குறைக்கு ஊழி யத்திற் காக போராட்டத்தில் குதித்துள்ள முகவர் ஆயுத இயக்கங்களும் ஆயுதக் களஞ்சியங்களிலேயே நம்பிக்கை வைத்து செயற்படுகின்றன.

ஜோர்ஜ்டவுன் பல்கலைக்கழ கத்திலுள்ள சர்வதேச உறவுகளுக்கான எட்மண்ட் வேல்ஸ் கல்லூரியின் சிரேஷ்ட ஆய்வாளரும் இராணுவ துறை நிபுணருமான Natalie Goldraing, IPS செய்திச் சேவைக்கு வழங்கிய செவ் வியில், மத்திய கிழக்கின் ஆயுத மோதல்கள் ஆயுத விற்பனைக்கான சந்தை வாய்ப்பை விஸ்தரித்துள்ளது. இதில், அரசாங்கங்களுக்கும் அமெ ரிக்காவுக்கும் இடையிலான ஆயுத ஒப்பந்தம் உள்ளிட்டு, மாபியாக்கள் கறுப்புச் சந்தையில் கடத்தும் ஆயுத நடவடிக்கைகளும் உள்ளடங்குகின்றன என்கிறார்.

வழமை போன்று கடந்த இரு தசாப்தங்களாக உலக ஆயுத வணிகத்தில் அமெரிக்காவே முன்னணி வகிக்கின்றது. உலகில் 75 நாடுகளில் நடை பெறும் உள்நாட்டுப் போர்களில் அமெரிக்கா விற்பனை செய்யும் ஆயுதங் களே பயன்படுத்தப்படுகின்றன. இதன் மூலம் அமெரிக்கா போர்களை இறக்குமதி செய்கின்றது அல்லது உற்பத்தி செய்கின்றது. அமெரிக்கா வின் தேசிய வருமானத்தில் ஆயுத வணிகம் குறிப்பிடத்தக்க பங்கை வகிக்கின்றது.



**உலக நாடுகளுக்கிடையில் சமா தானம் மலர வேண்டும் என்றும் வெள்ளை மாளிகையிலிருந்து அமைதிக் குரல் எழுப்பப்படுகின்றது. கறை படிந்த ஒரு கரத்தில் கொடிய ஆயுதங்களும் அடுத்த கரத்தில் சமாதானத்திற்கான வெண்புறாவும் என முரண்நகையான வெள்ளை மாளிகையின் வெளிநாட்டுக் கொள்கை உலகளா விய மனித அழிவுகளையும் பேரவ லங்களையுமே உருவாக்கி வருகின்றது. உலக சமாதானத்திற்கு முதல் அச்சுறுத்தலாக அமெரிக்காதான் இருக்கின்றது என்பதற்கு இது மாத்திரமே போதுமானது.**



இதற்காகவே அமெரிக்கா உலகின் வளமான இடங்களில் போர்களைத் தூண்டி வருகின்றது. ஆயுதக் குழுக்களை பயிற்றுவித்து வழிநடாத்து கின்றது. அவர்களுக்கு பெருமளவு ஆயுதங்களை விற்பனை செய்கின்றது. இவர்களுக்கு எதிராகப் போராடும் பிராந்திய அரசாங்கங்களுக்கும் இவர் களைப் பூச்சாண்டியாகக் காட்டி அமெரிக்கா பெருமளவு ஆயுதங்களை விற்பனை செய்கின்றது. 2014 இல் அமெரிக்காவிடமிருந்து சவூதி அரே பியா வாங்கிய ஆயுதங்களுக்கான விலை இலங் கையின் வரவு-செலவுத் திட்டத்தை விட நான்கு மடங்கு அதிகம் என்று கூறப்படுகின்றது.

இதேவேளை, உலக நாடுகளுக்கிடையில் சமா தானம் மலர வேண்டும் என்றும் வெள்ளை மாளிகையிலிருந்து அமைதிக் குரல் எழுப்பப்படு கின்றது. கறை படிந்த ஒரு கரத்தில் கொடிய ஆயுதங்களும் அடுத்த கரத் தில் சமாதானத்திற்கான வெண்புறாவும் என முரண்நகையான வெள்ளை மாளிகையின் வெளிநாட்டுக் கொள்கை உலகளா விய மனித அழிவுகளை யும் பேரவ லங்களையுமே உருவாக்கி வருகின்றது.

உலக சமாதானத்திற்கு முதல் அச்சுறுத்தலாக அமெரிக்காதான் இருக்கின்றது என்பதற்கு இது மாத்திரமே போதுமானது. ஆயுத விற்பையின் இரண்டாவது இடத்தில் ரஷ்யா உள்ளது. சீனாவின் இடம் வெறும் 5%மாகக் குறைந் துள்ளது.

உலக ஆயுதக் கொள்வனவில் இந்தியா 15 %ஐ வகிக்கின்றது. சீனா 5%, பாகிஸ்தான் 4%, தென் கொரியா 3%, சிங்கப்பூர் 3% என ஆசியாவின் கொள்வனவு வீதம் அமைந்துள்ளது. அமெரிக் காவிலிருந்தும் ஐரோப்பாவிலி ருந்தும் இறக்குமதி செய்யப்படும் மொத்த ஆயுதங்களில் 34% இந்தியா வுக்குரியது. இது சீனாவை விட மூன்று மடங்கு அதிக மாகும். 2005 தொடக்கம் 2009 காலப்பகுதி யிலும் 2014 இலும் சீனாவின் ஆயுத இறக்குமதி 42%ஆல் குறைவடைந்துள்ளது.

உலக ஆயுத ஏற்றுமதியில் 31%மான பங்கை அமெரிக்கா வகிக்கின்றது. ரஷ்யாவினதும் அமெ ரிக்காவினதும் பங்கு 60% என இவ்வறிக்கை கூறு கின்றது. உற்பத்தி செய்யும் பெரிய நாடு களாக அமெரிக்காவும் ஐரோப்பாவுமே உள்ளன. அவற்றி டமிருந்து பெருந்தொகை பணம் செலுத்தி உள் ளூரில் சக மக்களை அழித்துக் கொள்பவர்களாக ஆசி யர்களும் ஆபிரிக்கர்களும் உள் ளனர்.

SIPIRI இன் அறிக்கையில் நவீன ரக ஆயுதங்கே ளா பேரழிவு தரும் ஆயுதங்களோ, இரசாயன மற்றும் அணுவாயுதங்களோ உள்ளடங்கவில்லை. பாரம்பரிய ஆயுதங்களின் (Conventional Arms) விநியோகம் பற்றியதாகவே இவ்வறிக்கை அமைந் துள்ளது. அவ்வாறெனின் பிரஸ்தாப ஆயுதங்களின் உற்பத்தியும் விநியோகமும் எவ்வளவு பயங்கர மான பேராபத்தில் உலகைக் கொண்டு வந்து நிறுத்தும் என்பதைக் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாது.

அந்தப் பேராபத்திலும் சமாதானம் பற்றிப் பேசும் இதே மேற்கு நாடுகள்தான் பெருமளவு முதலீடு செய்துள்ளன. அமெரிக் காவுக்கும் ஐரோப்பாவுக்கும் உலக அமைதி பற்றிப் பேசும் தகுதி எங்கிருந்து வருகின்றது என்ற கேள்வி தர்க்க ரீதியில் மேலெழுவதை தவிர்க்க முடியாமல் போகின்றது.

# உய்குர் முஸ்லிம்களுக்கு எதிரான கலாசாரப் படுகொலையில் சீன அரசு

உய்குர் முஸ்லிம்கள் மீதான சீன அரசாங்கத்தின் பாய்ச்சல்கள் குறித்து கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. இவ்வருட ரமழான் மாதத்தில் முஸ்லிம்கள் நோன்பு நோற்பதற்கு அரசினால் விதிக்கப்பட்ட தடை சீனாவிலுள்ள கம்யூனிஸ அரசாங்கம் மீது தீவிர அதிருப்தியையும் கண்டனங்களையும் எழுப்பியுள்ளன.

பொதுவாக உலகிலும் -குறிப்பாக முஸ்லிம் உலகிலும் மதச் சுதந்திரத்திற்கு எதிரான இந்த அணுகுமுறை பாரிய விமர்சனத்திற்கு உட்பட்டுள்ளது. 1940 களில் சோவியத் யூனியனில் ஸ்டாலின் முஸ்லிம்களின் கலாசார, மத சுதந்திரத்தின் மீது விதித்த தடைகள் போன்று இன்று சீனாவில் கம்யூனிஸ அரசின் கீழ் இத்தகைய அடக்குமுறைகள் தொடர்வதாக அரசியல் பகுப்பாய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

கட்டுப்படாத முஸ்லிம்கள் ஸ்டாலினின் காலத்தில் பனிக்கட்டியில் உறைந்துபோன சைபீரியாவிற்கு நாடு கடத்தப்பட்டனர். பள்ளிவாயல்கள் இழுந்து மூடப்பட்டன. இராணுவ பயிற்சி முகாம்களாகப் பயன்படுத்தப்பட்டன. சில இடங்களில் அவை பிராந்திய கவர்னர்களின் நீச்சல் தடாகங்களாக மாற்றப்பட்டன. அதற்கும் மேலாக, சோவியத் யூனியனின் கீழிருந்த முஸ்லிம்களின் பள்ளிவாயல்கள் பன்றிப் பண்ணைகளாகவும் பயன்படுத்தப்பட்டன. 1940 களின் இந்தக் கசப்பான அனுபவங்கள் இன்று சீனாவில் முஸ்லிம்களைச் செறிவாகக் கொண்டுள்ள சிங்கியாங் மாகாணத்தில் நடைபெற்று வருகின்றமை கவலைக்குரியது.

சீனா கம்யூனிஸ நாடாக கொள்கையளவில் அடையாளம் காணப்படுகின்றபோதும் வேகமாக முதலாளித்துவத்தை நோக்கிச் சரிந்து வருகின்றது. இன்று பொருளாதார அடிப்படையிலான வர்க்கங்களும் சமூக அடுக்கமைவும் அங்கு தோன்றியுள்ளன. பொருளாதார ஏற்றத்தாழ்வு எல்லை மீறிச் செல்லும் நாடுகளுள் சீனாவும் ஒன்று. சீனாவின் இந்த மாற்றம் துணை ஸஹாராவையும் லத்தீன் அமெரிக்கா



வையும் விஞ்சுவதாக உள்ளது. இதன் ஒட்டு மொத்த விளைவாக புவியியல் சார்ந்த வர்க்கப் பிரிவினைகளும் இன நெருக்கடிகளும் இந்நாட்டில் தலைதூக்கியுள்ளன.

நாட்டின் ஆட்சியிலுள்ள கம்யூனிஸக் கட்சி கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் சீனாவில் அமைதியான சமூகம் நிலைநாட்டப்படுவதற்கான பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்தது. துரதிஷ்டமாக அந்த அரசாங்கமே அதற்கெதிராக செயல்படுகின்றது. தனது சொந்தப் பிரஜைகளை பொருளாதார ரீதியிலும் அரசியலிலும் பழிவாங்கும் சீன அரசாங்கம், சிறுபான்மை உய்குர் முஸ்லிம்களின் மதச் சுதந்திரத்தைப் பச்சையாகவே மீறத் தொடங்கியுள்ளது.

சிங்கியாங் பிராந்தியம் உய்குர் முஸ்லிம்களை பெரும்பான்மை யாகக் கொண்டது. ஒரு காலத்தில் தனி முஸ்லிம் குடியரசாக விளங்கிய இப்பிராந்தியம், சீனாவோடு இணைக்கப்பட்டது. உய்குர் துருக்கிய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள். பீஜிங்கின் காண்ணோட்டத்தில் அவர்கள் சிறுபான்மையினர்.

கி.பி. 700 ஆண்டுகளிலும் 20 ஆம் நூற்றாண்டிலும் உய்குர் மக்கள் சுயாதீனமான சுதந்திர தேசத்தை உருவாக்கும் ஆற்றல் பெற் றிருந்தனர். 1931 முதல் 1949 வரை அவர்களால் உருவாக்கப்பட்டதே கிழக்கு துர்கிஸ்தான் குடியரசு. ஆனால், 1950 களில் இரும்புக் கரம் கொண்டு ஆட்சி பீடமேறிய கம்யூனிஸ சர்வாதிகாரம், உய்குர் முஸ்லிம்களின் சுதந்திரக் கனவை சிதைத்து, சிங்கியாங் ஐ சீனாவுடன் இணைத்தது. பீஜிங்கின் சர்வதிகார அடக்கு முறையும் இன ஒடுக்குதலும் நீடித்த போதும் உய்குர் மக்கள் தமது கலாசார, சமய பாரம்பரியங்களை விட்டுவிடவில்லை. முஸ்லிம்களின் அடையாளங்களையும் தனித்துவத்தையும் சிதைத்து, தனிப் பெரும் அரசியல் சக்தியை பலயீனப்படுத்த எண்ணிய கம்யூனிஸ அரசு, ஹான் இனத்தவர்களை அங்கு குடியேற்றியது. முஸ்லிம்களின் சனத்தொகை தொடர்ச்சியை சிதைப்பதே அதன் பிரதான நோக்கம்.

குடியேற்றப்பட்ட பின்னர் ஹான் சிறுபான்மையினர் அரசாங்க உதவியோடு வர்த்தகத் துறையிலும் நிருவாகத்திலும் முஸ்லிம்களை முந்திக் கொண்டு முன்னேற்றமடையத் தொடங்கினர். பீஜிங் அரசாங்கத்தின் ஏஜண்டுகளாகவே அதன் தலைவர்கள் பயன்படுத்தப்பட்டனர். முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளை அவர்கள் கட்டவிழ்த்தனர். கம்யூனிஸ அரசு அதற்கு பின்னணியில் இருந்தது.

ஹான் இனத்தவர்களின் சமூகத்தோடு உய்குர் மக்களை உள்ளீர்ப்பதன் மூலம் கலாசாரத் தனித்துவத்தை இல்லாதொழிக்கலாம் என்று கம்யூனிஸ அரசு கனவு கண்டது. ஆனால், அது சாத்தியமாக வில்லை. நேரடியான இராணுவ அடக்கு முறையில் அரசு இறங்கியது. சிங்கியாங் பிராந்தியத்தில் இனக் கலவரங்கள் மூட்டப்பட்டன. முஸ்லிம்களின் வியாபார நிலையங்கள் குறிவைக்கப்பட்டன. அரச நிருவாகத்தில் முஸ்லிம்கள் ஈடுபடாத வாறு தடுக்கும் சட்டங்கள் கொண்டு வரப்பட்டன. அதன் மூலம் முஸ்லிம்கள் அரசியல் ரீதியில் பலவீனப்படுத்தப்பட்டனர்.

அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களிலும் உய்குர் முஸ்லிம்கள் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்பட்டனர். ஆனாலும் உய்குர் முஸ்லிம்கள் தமது சிவில், சமய உரிமைகளுக்கான போராட்டத்க் கைவிடவில்லை. தற்போது சீன அரசாங்கத்தின் கலாசார ஒடுக்குமுறையின் உச்சமாக நோன்பு நோற்பது தடைசெய்யப்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்கள், அரச நிருவாகிகள், நோன்பு நோற்பது உத்தியோகபூர்வமாகத்தடைசெய்யப்பட்டுள்ளதோடு, பொது இடங்களில் முஸ்லிம் பெண்கள் ஹிஜாப் அணிவதும் சட்டத்தின் மூலம் தடுக்கப்பட்டுள்ளது. சீன அரசாங்கம் இப்பிராந்தியத்திலுள்ள உற்பத்தி நிலையங்களையும் தொழிற்சாலைகளையும் 1990 களில் இழுத்து மூடியமையால் ஆயிரக்கணக்கான முஸ்லிம் இளைஞர்கள் தொழிலற்றவர்களாக மாற்றப்பட்டனர்.



சிங்கியாங் மாநிலம் பல்வேறு பொருளாதார வளங்களைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அம்மாநிலத்தை நவீனமயமாக்கல் என்ற பெயரில் நிகழ்த்தப்பட்டவையெல்லாம் முஸ்லிம்களைப்

பூண்டோடு அழிப்பதாகவே உள்ளது. பரப்பளவில் அகன்று விரிந்துள்ள சீனாவில் சிங்கியாங் மாநிலம் மத்திய அரசாங்கத்தின் கீழுள்ள ஒரு சுயாட்சிப் பிராந்தியமாகவே கருதப்படுகின்றபோதும், பீஜிங் அரசாங்கத்தின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் அது வைக்கப்பட்டுள்ளது.

2009 இல் குடியேற்றவாசிகளான ஹான் இனத்தவர்களுக்கும் உய்குர் முஸ்லிம்களுக்கும் இடையில் ஏற்பட்ட பதட்டம் வன்முறைக் கலவரங்களாக வெடித்தன. தலைநகர் உரும்கீயில் நடந்த கலவரங்களில் 200 இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர். பீஜிங் அரச படையினர் ஹான் குடியேற்றக்காரர்கள் பக்கமே நின்றனர். நீதி வேண்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட உய்குர் இளைஞர்ளை அரச படையினர் அடித்துத் துன்புறுத்தியதோடு, பலரைக் கைதுசெய்தனர்.

2009 ஆம் ஆண்டிலிருந்து கடந்த 6 ஆண்டுகளாக சிங்கியாங் சுயாட்சிப் பிராந்தியம் சீன அரச படையினரின் அடக்குமுறைக் களமாகவே தோற்றமளிக்கின்றது. இப்பிராந்தியத்தில் ஹான்-உய்குர் இன முறுகலுக்கான மூல காரணத்தைக் கண்டுபிடிக்கத் தவறும் சீன அரசாங்கம், உய்குர் முஸ்லிம்களைப் பயங்கரவாதிகளாக முத்திரை குத்துகின்றது.

உய்குர் முஸ்லிம்களுக்கான உண்மையான அரசியல் சுயாதீனமோ சுதந்திரமோ சீன அரசாங்கத்தால் வழங்கப்படவில்லை. வர்த்தகத் துறை அனுபவமும் ஈடுபாடும் கொண்ட உய்குர் இனத்தவர்கள் அரசாங்கத்தின் பாகுபாடான கொள்கையினால் வணிகப் பொருளாதாரத்தில் பின்தள்ளப்பட்டுள்ளனர். வணிகம், நிருவாகம் என்பவற்றின் மீது திணிக்கப்பட்ட கட்டுப்பாடுகள், தற்போது மத, கலாசாரத் தளங்களுக்குள் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

கிழக்கு துர்கிஸ்தானில் -அதாவது சிங்கியாங்கில் வாழும் உய்குர் இனத்தவர்களில் இளைஞர்களே பிரச்சினையின் தூண்டுகோல் என்று சீன அரசாங்கம் குற்றம் சுமத்தி வருகின்றது. துர்கிஸ்தானில் செயல்பட்டு வரும் துர்கிஸ்தான் இஸ்லாமியக் கட்சியின் மீதும் இராணுவ அடக்குமுறைகள் கட்டவிழ்க்கப்படுகின்றன. முஸ்லிம்கள் எங்கு தொழ வேண்டும் என்பதை பீஜிங் அரசாங்கமே தீர்மானிக்கும் என அறிவித்துள்ள அரசு, அரசியல் கூட்டங்களில் இமாம்கள் உரையாற்ற வேண்டுமாயின், அரசின் அனுமதியை கண்டிப்பாகப் பெற வேண்டும் என விதித்துள்ளது.

பள்ளிவாயல்கள் அனைத்தும் அரசாங்கத்தில் பதிவுசெய்யப்படுகின்றன. அரச துறையில் பணியாற்றும் முஸ்லிம்கள் நோன்பு நோற்கக் கூடாது என்று தடுக்கப்பட்டுள்ளதோடு, பகலில் அனைத்து உணவகங்களும் திறந்திருக்க வேண்டும் என வற்புறுத்தப்படுகின்றது. ஒன்றுகூடும் சுதந்திரம் முற்றாக மறுக்கப்பட்டுள்ளது.

சிங்கியாங் பிராந்தியத்தில் அல்லது கிழக்கு துர்கிஸ்தானில் இடம்பெற்று வரும் இன அடக்குமுறைகளுக்கும் வன்முறைகளுக்கும் சீன அரசாங்கமே பொறுப்புக் கூற வேண்டும். அதை விடுத்து அமைதியாகச் செயல்படும் இஸ்லாமிய இயக்கமான கிழக்கு துர்கிஸ்தான் இஸ்லாமிய இயக்கத்தின் மீது குற்றங்களை அடுக்குவது அரசாங்கத்தின் கீழ்த்தரமான தந்திரோபாயம் என்று விமர்சிக்கப்படுகிறது. அங்கு நடைபெறும் அனைத்து இனக் கலவரங்களுக்கும் இஸ்லாமியவாதிகளே காரணம் என்று அரசாங்கம் தனது பொறுப்பிலிருந்து விலகிக்கொள்கின்றது.

சீனா உய்குர் இன முஸ்லிம்கள் மீது கடந்த 50 ஆண்டுகளாக கட்டவிழ்த்து வரும் இனப் படுகொலைகள் தற்போது கலாசாரப் படுகொலையாக விரிவுபெற்றுள்ளது. ரஷ்யா, செச்னியாவில் நிகழ்த்தும் இனப்படுகொலைகளை ஒத்ததே கிழக்கு துர்கிஸ்தானில் சீனா நிகழ்த்தி வரும் படுகொலைகளாகும். சீனா அதற்கு ஒருபடி மேலே சென்று கலாசாரப் படுகொலையிலும் இறங்கியுள்ளது.

சீனாவின் இந்த நடவடிக்கைகள் தொடர்ந்தால் பிராந்தியத்தில் அமைதிச் சமூகம் பற்றிய கனவு முற்றாகவே உடைந்து போய்விடும். 57 நாடுகளை உள்ளடக்கிய இஸ்லாமிய கூட்டுறவுக்கான அமையம் சீன அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்து இதுவரை ஒரு பலமான கண்டனக் குரலை வெளிப்படுத்தவில்லை என்பது இஸ்லாமிய உலகில் பரந்துபட்ட அதிருப்தியை உருவாக்கியுள்ளது. மியன்மாரில் ரோஹிங்யா முஸ்லிம்கள் குறித்து அறபு-முஸ்லிம் நாடுகள் காத்து வரும் நீண்ட மௌனத்தின் ஒரு பகுதி இது என விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அரசுகளின் தலையீடு இன்றி உய்குர் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு கிட்டப் போவதில்லை. இனத்தால் துருக்கியர்களாக விளங்கும் உய்குர் மக்கள், தற்போது துருக்கியின் உதவியை நாடி நிற்கின்றனர். துருக்கி அரசாங்கமும் உய்குர் மக்களின் கோரிக்கைக்கு பச்சைக் கொடி காட்டியுள்ளது. ஆனால், சீன அரசாங்கத்தை அது எவ்வாறு கையாளப் போகின்றது என்பது இன்னும் சிக்கலான ஒன்றாகவே உள்ளது.



## எகிப்து: சட்டமா அதிபரின் கொலை

# தீவிரமடையும் இஹ்வான்கள் மீதான ஒடுக்குமுறை

எகிப்தின் சட்டமா அதிபர் ஹிஷாம் பரகத் கார் குண்டுவெடிப்பில் கொலை செய்யப்பட்டதை அடுத்து இஹ்வான்கள் மீது குற்றச்சாட்டை சுமத்தியுள்ள ஸீஸியின் இராணுவ அரசாங்கம், கொலை, வன்முறைத் தாக்குதல், கைது என சகோதரத்துவ அமைப்பினரை ஒடுக்கும் நடவடிக்கைகளில் தீவிரமாக இறங்கியுள்ளது.

சினாயைத் தளமாகக் கொண்டு செயல்படும் ஓர் ஆயுத இயக்கம் ஹிஷாமின் கொலைக்கு தெளிவாக உரிமை கோரியுள்ள போதும், குற்றச்சாட்டை சகோதரத்துவ அமைப்பினர் மீது போடும் ஸீஸியின் உள்நோக்கம் தெளிவானதாகும். இஹ்வான்களுக்கு எதிரான தேசிய அழிப்பு நடவடிக்கை ஒன்றின் ஆரம்பமே இது என்று அந்நாட்டின் அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

கொல்லப்பட்ட சட்டமா அதிபர் ஹிஷாம் பரகத் இன்றைய எகிப்தின் வன்முறைகளுக்கு எல்லாம் அடிப்படைக் காரணமாக இருந்தவர். 30 ஆண்டுகள் சர்வாதிகார ஆட்சி நடத்திய முபாரக்கை அனைத்துக் குற்றங்களிலிருந்தும் விடுவிப்பதற்கு பின்னணியில் இருந்தவர். இராணுவச் சர்வாதிகாரத்தை நியாயப்படுத்தி வந்த அவர், இராணுவத் துறையால் இழைக்கப்பட்டு வந்த குற்றங்களை விசாரிக்காமலேயே இராணுவ அதிகாரிகளை காப்பாற்றி வந்தார்.

போலியான ஆவணங்களைத் தயாரிப்பதிலும் சிவிலியன்களுக்கு எதிராக அவற்றைப் பயன்படுத்துவதிலும் நிபுணத்துவம் பெற்றிருந்த ஹிஷாம், நேரடியாக இஸ்ரேலின் கண்காணிப்பில் இருந்தவர். அவர் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டாரா அல்லது ஏற்கனவே நஞ்சூட்டப்பட்ட நிலையில் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதா என்ற சந்தேகம் வலுவாக எழுந்துள்ள நிலையில், இஹ்வான்களை ஒடுக்கும் இராணுவ வன்முறைகளுக்கு ஹிஷாமை ஸீஸி ஒரு துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தி வருகின்றார்.

இடைக்கால ஜனாதிபதியாக இருந்த அத்லி மன்சூர் எனும் கிறிஸ்தவரால் பரகத் சட்டமா அதிபராக நியமிக்கப்பட்டார். இடையில் முர்ஸியின் வரவை அடுத்து இராஜினாமா செய்த அவர், 2013 ஜூலை 10 இல் மீண்டும் சட்டமா அதிபர் பதவியைப் பெற்றார். நாட்டில் இஸ்லாமிய வாதத்தை பூண்டோடு அழிப்பதற்கு ஸீஸியின் அரசாங்கத்தோடு சேர்ந்து பல சதித் திட்டங்களில்



பங்கெடுத்தவரே இவர். இஸ்லாமிய இயக்கத்தின் 14 முன்னணித் தலைவர்களது சொத்துக்களை முடக்கும் வகையில் சட்ட ஆணை பிறப்பித்தவர். கலாநிதி முஹம்மத் பதீஃ, கலாநிதி கைரத் ஷாத்திர், மஹ்தி ஆகிப், சஅத் அல் கத்தானி, இஸாம் அல் இர்யான், முஹம்மத் அல் பல்தாஜி போன்றோரின் சொத்துக்களை முடக்கியதோடு, அவர் களைக் கைதுசெய்வதற்கும் சட்ட அனுமதி வழங்கியவர் இவர்.

இஹ்வான்களை ஒடுக்குவதற்கு ஸீஸியின் அரசாங்கமே இக் கார்க் குண்டுத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்ற சந்தேகமும் வலுவாக எழுந்துள்ளது. இக்கட்டுரை எழுதப்படும் வரை ஹிஷாமின் கொலையைத் தொடர்ந்து குற்றச் சாட்டை இஹ்வான்கள் மீது அள்ளி வீசிய அரசாங்கம், கெய்ரோவிலுள்ள இஹ்வான்களின் வீடொன்றைச் சுற்றி வளைத்து, 13 பேரை சுட்டுக் கொன்றுள்ளது. இக்கொலைக்கு ஸீஸியே காரணம் என்று சகோதரத்துவ அமைப்பினர் கருத்து வெளியிட்டுள்ளனர். நாடு தழுவிய ரீதியில் ஸீஸியின் அரசாங்கத்திற்கு எதிரான புரட்சியில் ஈடுபடுமாறு இஹ்வான்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள இஹ்வான்களின் குடும்பங்களுக்கு உதவுவது குறித்து கலந்துரையாடுவதற்குக் கூடியிருந்த இஹ்வான் அங்கத்தவர்கள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ஆனால் எகிப்தின் உள்நாட்டு அமைச்சோ பொலிஸ், இராணுவம் மற்றும் ஊடகங்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு சகோதரத்துவ அமைப்பினர் திட்டமிட்டிருந்ததாகக் கூறுவது முற்றிலும் அபத்தமானது. வீடொன்றைச் சுற்றிவளைத்த எகிப்திய இராணுவம், அங்கிருந்த அனைவரையும் எந்த விசாரணையுமின்றி படுகொலை செய்துள்ளது என முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்திற்கு ஆதரவான தொலைக் காட்சி சேவையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இக்கொலையை அடுத்து அறிக்கை வெளியிட்ட இவ்வமைப்பு, எகிப்தின் கிரிமினல் அப்துல் பத்தாஹ்வும் அவரது கோஷ்டியினரும் இக்கொலைக் குற்றங்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டும் எனவும் இதனது விளைவுகள் பாரதூரமான இருக்கும் என்றும் எச்சரித்துள்ளது. ''நாட்டைப் பாதுகாக்க கிளர்ந்தெழுங்கள். உங்களதும் உங்களது குழந்தைகளதும் உயிரைக் காப்பதற்குக் கிளர்ந்தெழுங்கள். கொலையாளிகள் தாய்நாட்டுக்கு எதிரான பயங்கரப் படுகொலைகளைக் கட்டவிழ்த்து வருகின்றனர். அநீதி, அடக்குமுறை என்பவற்றை அழிப்பதற்கு ஒன்றுபடுங்கள்'' என அவ்வறிக்கையில் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் நடைபெற்ற வன்முறைகளில் இது மிகவும் பாரதூரமானது என்று அது எச்சரித்துள்ளது. சினாயில் இயங்கும் ஆயுத இயக்கமே ஹிஷாமின் படுகொலையை நிகழ்த்தியதாக உரிமை கோரியுள்ளது. அவ்வியக்கத்திற்கும் எகிப்தின் இராணுவத்திற்கும் இடையில் நடைபெற்ற மோதலில் 17 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த நவம்பர் மாதத்தில் அங்கு ஊடுருவிய ஐசிஸ் இயக்கத்தின் ஒரு பகுதியான அன்ஸாரு பைதில் மக்திஸ் குழுவினரே கெய்ரோ குண்டு வெடிப்புக்கு உரிமை கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. கெய்ரோ குண்டுவெடிப்பை அடுத்து ஸீஸியின் வெறித் தனம் பல்வேறு வடிவங்களில் வெளிப்படத் தொடங்கியுள்ளது.

எகிப்தின் அல் அஸ்ஹர் பல்கலைக்கழகத்திலிருந்து 75 மாணவிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளனர். பல்கலைக்கழகத்திற்கு எதிரான சதி நடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபட்டனர் என குற்றம் முன்வைக்கப்பட்டுள்ளது. அஸ்ஹரின் பிரதித் தலைவர் அஹ்மத் ஹுஸ்னி சகோதரத்துவ அமைப்பிற்கு ஆதரவான மாணவிகள் இதுவரை 200 பேர் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளார்.

முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தோடு தொடர்பானவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் பல்கலைக் கழக மாணவர்களுக்கு ஸீஸியின் அரசாங்கம் கடும் இடையூறுகளை விளைவித்து வருகின்றது. இவ்வாறு ஹிஷாம் பரக்கத்தின் கொலை எகிப்தில் பாரிய அதிர்வுகளை உருவாக்கியுள்ளது.



# காஷ்மீரில் இந்திய இராணுவத்தின் சிறப்பதிகாரம்

## ◦ கேள்விக்குள்ளாக்குகின்றது சர்வதேச மன்னிப்புச் சபை

கடந்த கால் நூற்றாண்டில் இந்தியக் கட்டுப் பாட்டிலுள்ள காஷ்மீரில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். சமீபத்திய வருடங்களில் இராணுவத்தின் வன்முறைகள் விகாரமடைந்துள்ளன. மனித உரிமையைப் பாரதூரமாக மீறும் வகையில் இந்திய இராணுவம் செயல் படுகின்றது.

1947 இல் காஷ்மீர் இந்தியாவினாலும் பாகிஸ்தானினாலும் கூறுபோடப்பட்டது. காஷ்மீரை மொத்தமாக விழுங்கிக் கொள்ள இரு நாடுகளுக்கிடையில் பல யுத்தங்கள் நடந்தன. தற்போது சர்வதேச மன்னிப்புச் சபை இந்திய இராணுவத்தின் இரும்புத் திரைக்குப் பின்னால் காஷ்மீரில் நடைபெற்று வரும் அப்பட்டமான மனித உரிமை மீறல்கள் குறித்து எச்சரிக்கை ஒலியை எழுப்பியுள்ளது.

கடந்த 25 ஆண்டு காலமாக காஷ்மீரில் நிலை கொண்டுள்ள இந்திய இராணுவத்தினருக்கு இந்திய அரசாங்கம் வழங்கியுள்ள சிறப்பதிகாரம் விகாரமாக துஷ்பிரயோகம் செய்யப்படுவதனால் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் முன்னொருபோதும் இல்லாதவாறு மோசமான வடிவங்களைப் பெற்று வருகின்றது.

11 காஷ்மீரியர்களுக்கு ஒரு இராணுவம் என்ற வகையில், உலகிலேயே மிகச் செறிவாக இராணுவ மயப்படுத்தப்பட்ட பிராந்தியம் காஷ்மீர் ஆகும். சந்தேகத்தின் பெயரில் கைதுசெய்தல், சுற்றிவளைத்தல், பெண்களை மானபங்கப்படுத்தல், என்கவுன்டர் என்ற பெயரில் சுட்டுக் கொல்லல் என இராணுவம் விரும்புவதைச் செய்யும் சிறப்பதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்தியப் பாராளுமன்றத்தின் இச்சட்டம் சர்வதேச மனித உரிமைப் பிரகடனத்தையும் மனிதாபிமான சட்டங்களையும் மொத்தமாக மீறுவதற்கு வழிவகுக்கின்றது.

லண்டனைத் தளமாகக் கொண்டு செயல்படும் மன்னிப்புச் சபை ஜூலை 01 இல் இந்தியக் கட்டுப்பாட்டிலுள்ள காஷ்மீர் தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில், காஷ்மீர் மனித உரிமை மீறல்களுக்கு இச்சிறப்புச் சட்டமே காரணம் என்று சுட்டிக்காட்டியுள்ளது.


இதுவரை கடந்த 25 ஆண்டுகளில் காஷ்மீர் பள்ளத்தாக்கில் மனித உரிமை மீறல் குறித்து எந்தவொரு இராணுவத்தினரும் சிவில் நீதிமன்றங்களில் விசாரிக்கப்படவில்லை. இந்தப் பொறுப்பீனம் சீரியஸான துஷ்பிரயோகங்களுக்கு காரணமாகியுள்ளது என மன்னிப்புச் சபையின் பூகோள நடவடிக்கைப் பொறுப்பாளர் மினார் பிம்பில் சுட்டிக் காட்டியுள்ளார்.

சர்ச்சைக்குரிய சிறப்பதிகார சட்டத்தை இராணுவம் துஷ்பிரயோகம் செய்வதனாலேயே காஷ்மீரில் வன்முறைகள் சுழற்சி வடிவம் பெற்றுள்ளதாக இந்த அறிக்கை கூறுகின்றது. இச்சட்டத்தை வாபஸ் வாங்குமாறும், பெருந் தொகை இராணுவத்தை வாபஸ் வாங்குமாறும் இந்திய அரசை தான் கோருவதாக அவ்வறிக்கை கூறுகின்றது.

''ஜம்மு காஷ்மீரில் பாதுகாப்புப் படையினரால் நிகழும் மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புக் கூறலின் தோல்வி'' எனும் பெயரில் இவ்வறிக்கை வெளிவந்துள்ளது.

1990 இல் இந்தியப் பாராளுமன்றம் இச்சட்டத்தை இயற்றியபோது ஜம்மு காஷ்மீரின் தற்போதைய தலைவர் முப்தி முஹம்மத் ஸஈதே மத்திய அரசாங்கத்தில் உள்நாட்டு அமைச்சராக இருந்தார்.

இந்த ஒடுக்குமுறைச் சட்டத்தை நீக்குவதற்கு ஸஈதுக்கு அப்போதும் வாய்ப்பிருந்தது. இப்போதும் வாய்ப்பிருக்கிறது என்று பிம்பில் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.


OAD
ORCHID
ALUMINIUM DISTRIBUTORS
Manufactures of Aluminium,Stainless Steel Hotel,Kitchen Equipments
30 வருட அனுபவம்
எமது பள்ளிவாயல்கள், மத்ரஸாக்கள், ஹோட்டல் மற்றும்
நோன்பு காலங்களில் பள்ளிவாசல்களுக்குத் தேவையான
உறுதியான முறையில் தயாரிக்கப்பட்ட சகல அளவுகளிலுமான
அலுமினியம் சட்டி (பானை)களை 4 கொத்து
முதல் 80 கொத்து வரை எம்மிடம் பெற்றுக்
கொள்ளலாம். (சமையலறைக்குத் தேவையான
அனைத்து உபகரணங்களும் எம்மிடம் உண்டு)
பழைய பானைகளைத் திருத்தி கொள்ளலாம்.
அல்லது அவற்றுக்குப் பதிலாக
புதிய பானைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.
50 - 80 கொத்து பானைகளுக்கு
20 வருட உத்தரவாதம் உண்டு
நாட்டின் எப்பாகத்திற்கும்
விநியோக வசதி உண்டு!
NO:11, Weda Mawatha,
Wattalpola, Henamulla,
Panaduara.
Phone : 038 4924195
Fax : 038 4924470
Mob : 0777 322896
Hotline : 077 3211074

Importers and Manufacture

FB Industries



MB & FB Brand Brass Hinges & Window Fittings

Dealers Islandwide

Tel: 0773435700, 0112431356

Fax: 0112321361

Desgin : Sajith Ali

Registered as a Newspaper in GPO - QD/72/NEWS/2015 Printed: AJ Prints (Pvt) Ltd, Dehiwala